Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு+IV
விலை ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும் பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்
இல. 13, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3916, 0777 801038
(சி/2485)

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 மார்கழி – 10 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஃதா 12 (25.12.2004) சனிக்கிழமை இதழ்:86

# சமாதானப் பேச்சுக் குறித்த தெளிவான நிலைப்பாட்டை அரசு அறிவிக்கவேண்டும்!

## விடுதலைப் புலிகள் தெரிவிப்பு

(லண்டன்)

சமாதானப் பேச்சுக்களுக்கு அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட புதிய நிகழ்ச்சி நிரலை நிராகரித்துள்ள விடுதலைப் புலிகள் – சமாதானப் பேச்சுத் தொடர்பாக அரசாங்கம் தெளிவான நிலைப்பாட்டை அறிவிக்கவேண்டும் எனக் கோரியுள் ளனர்.

விடுதலைப் புலிகளின் இந்தப் பதில் – நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்மிடம் லண்டனில் வைத்து விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தால் கையளிக்கப்பட்டது.

நேற்று லண்டனில் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை எரிக் சொல்ஹெய்ம் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இந்தச் சந்திப்பின்போதே விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

எரிக் சொல்ஹெய்மிடம் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இது தொடர்பாக மேலும் (12 ஆம் பக்கம் பார்க்க)

அனைவருக்கும் எமது நத்தார் வாழ்த்துக்கள்



# புதிய விமானப்படைத்தளம் ஹபராதுவவில் அமையும்!

(கொழும்பு)

இலங்கை விமானப்படைக்கென சர்வதேச தரத்தில் புதிய சர்வதேச யுத்த விமானத்தளம் ஒன்று நிறுவப்பட இருப்பதாகத் தெரியவருகிறது. இலங்கையில் முதல் தடவையாக நிறுவப்படவிருக்கும் இந்த சர்வதேச யுத்த விமானத்தளமானது காலி மாவட்டத்திலுள்ள ஹபராதுவ என்ற பாதுகாப்பான பிரதேசத்தில் நிறுவப்படலாமென்று தெரியவருகிறது.

இந்தப் பிரதேசத்திலுள்ள ஆயிரம் ஹெக்ரெயர் நிலப்பரப்பு தற்போது அமெரிக்க இராணுவஆய்வாளர்களால் இனங்காணப்பட்டுள்ளதாகவும், இந்தப் பிராந்தியத்தில் யுத்த விமானங்களுக்கான காலநிலை, நிலஅமைப்பு, காலநிலை மாற்றங்கள் தொடர்பாக பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு வருவதாகவும் இவை சாதகமான நிலையைக் காட்டுவதாகவும் தகவல்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

# மக்கள் எழுச்சிப் போராட்டம் அடுத்த வாரம் யாழ்.நகரில்!

சமாதானத்தை வலியுறுத்தும் மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் யாழ்ப்பாணம் - நல்லூர் கோட்டப் பகுதியில் மிகவும் பிரமாண்டமான அளவில் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

யாழ்.நகரிலிருந்து மூன்று கிலோமீற்றர் தூரத்துக்கு கண்டி வீதியிலும் பருத்தித்துறை வீதியிலும், பலாலி வீதியிலும், காங்கேசன்துறை வீதியிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

எதிர்வரும் 27 ஆம் திகதி பருத்தித்துறை வீதியிலும், 28 ஆம் திகதி பலாலி வீதியிலும், 29 ஆம் திகதி காங்கேசன்துறை வீதியிலும் மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் நடைபெற்று, சமாதானத்தை வலியுறுத்தும் கூட்டங்கள் நகர மத்தியில் நடைபெறவுள்ளன.

மிகவும் பிரமாண்டமான அளவில் சுமார் 7 கிலோமீற்றர் தூரத்துக்கு வீதியோரங்களில் இந்தப் போராட்டங்களில் மக்கள் ஈடுபடவுள்ளனர்.

அடிப்படை மனிதஉரிமைகளை வலியுறுத்தி நடத்தப்படும் இந்தப் போராட்டத்துக்கு அரசாங்கம் தகுந்த தீர்வை வழங்க முன்வராத பட்சத்தில் அரச அலுவலகங்களை முடக்கி, தமது போராட்டங்களை விஸ்தரிக்கவுள்ளதாகவும் தேசிய எழுச்சிப் பேரவையினர் தெரிவித்தனர்.

## ஆண் போராளிகள் மட்டுமே கிளிநொச்சி திரும்பினர்!

(மட்டக்களப்பு)

பெண் போராளிகள் இடுப்புப் பட்டி அணிந்துகொண்டு செல்ல இராணுவத்தினர் அனுமதி மறுத்ததையடுத்து - மட்டக்களப்பில் இருந்து ஆண் போராளிகள் மட்டுமே நேற்று கிளிநொச்சி திரும்பினர்.

30 ஆண் போராளிகளும், 20 பெண் போராளிகளும் நேற்றுமுன்தினம் மட்டக்களப்பிலிருந்து கிளிநொச்சிக்குச் செல்வதற்கு புலிகள் மற்றும் அரச சமாதானச் செயலகங்கள் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், இராணுவத்தினரின் (12 ஆம் பக்கம் பார்க்க)

# கொடிகாமம் பகுதி மக்கள் நேற்று எழுச்சிப்போராட்டம்!







(கொடிகாமம்)

போருக்கான ஆயத்தங்களைக் கைவிட்டு விடுதலைப் புலிகளின் இடைக்கால வரைபின் அடிப்படையில் அரசாங்கம் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்று வலியுறுத்தி, கொடிகாமத்தில் நேற்று எழுச்சிப் போராட்டத்தில் பொதுமக்கள் ஈடுபட்டனர்.

கொடிகாமம் சந்தியில் காலை 10.00 மணியளவில் வீதியின் இரு மருங்கிலும் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு சமாதானத்தை வலியுறுத்தி மக்கள் சுமார் அரை மணி நேரம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து மக்கள் அனைவரும் ஒன்றுகூடி கொடிகாமம் பஸ்தரிப்பு நிலையத்தின் முன் சமாதானத்தை வலியுறுத்தும் கூட்டம் தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் தலைமையில் நடைபெற்றது. (12 ஆம் பக்கம் பார்க்க)



நள்ளிரவு யாழ். மரியன்னை தேவாலயத்தில் நடந்த ஆராதனை!

# சீனாவிடம் ஆயுதங்கள் வாங்குவதை நிறுத்துமாறு அமெரிக்கா அழுத்தம்!

நாட்டின் படைபலத்தை அதிகரிக்கும் நோக்குடன் சீனாவிடமிருந்து ஆயுதங்கள் மற்றும் யுத்த தளபாடங்கள் கொள்வனவு செய்வதை இலங்கை அரசாங்கம் நிறுத்தவேணடும் என்று அமெரிக்காவின் தரப்பில் இருந்து பலத்த அழுத்தங்கள் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இலங்கை நீண்ட காலமாக சீனாவிடமிருந்து கடன் அடிப்படையிலும், ஒப்பந்த அடிப்படையிலும் ஆயுதங்களைக் கொள்வனவு செய்து வருகிறது. இவை அனைத்தையும் உடனடியாக நிறுத்துமாறு அமெரிக்கா உத்தரவிட்டுள்ளது.

அண்மையில் இலங்கையின் கடற்படைக்கு சீனாவிடமிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய முற்பட்டபோதே இந்த அழுத்தம் பிரயோகிக்கப்பட்டதாக இராணுவத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

சீன நாட்டின் இராணுவ அதிகாரிகளின் இரகசிய இலங்கைக்கான பயணமும், ஜே.வி.பி அமைப்பினரின் சீனாவுடனான இரகசியத் தொடர்புகளும் இதற்குக் காரணமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

# யாழ்.படைத் தளபதியின் நத்தார் தினச் செய்தி!

(யாழ்ப்பாணம்)

சகலரும் ஒற்றுமையுடன் வாழ நத்தார் தினத்தில் பிரார்த்திப்பதாக யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் வெளியிட்டுள்ள நத்தார் தினச் செய்தியில் தெரிவித்துள்ளளார்.

சகலரும் ஒற்றுமையுடனும் ஐக்கியத்துடனும் வாழ்வதற்கு வழி காட்டிய இயேசுபிரான் - அடுத்தவர்களைப் பழிவாங்கவும், வைராக்கியத்துடன் செயற்படவும், ஒருவருக்கொருவர் பொறாமை கொள்ளவும் அனுமதிக்கவில்லை.

அதற்கேற்ப இந்த நாட்டில் நிரந்தர சமாதானத்தை உருவாக்கும் வகையில் தற்போதைய சமாதானத்தைத் திடப்படுத்த இந்த நல்ல நாளைப் பயன்படுத்துவோம்.

இன்றைய நாளில் தென்னிலங்கையில் வாழும் சிங்கள இன மக்களும் நத்தார் தினத்தைக் கொண்டாடுகிறார்கள்.

சமாதானம் என்ற வார்த்தை இன்றைக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு வார்த்தையாக இல்லாமல் அதை நிரந்தரமாக்கிக்கொள்ள சகலரும் கடமையுடனும் பொறுப்புடனும் ஒன்றிணைந்து செயற்படுவோம். இன்றைய நத்தார்தினத்தில் சகலரின் மத்தியில் ஒற்றுமை ஏற்பட்டு நிரந்தர சமாதானம் உருவாக மனதார பிரார்த்தனை செய்கிறேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பஸ் தரிப்பு நிலையத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு!

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பஸ் நிலையப் பகுதியில் புதிதாக அமைக்கப்படவுள்ள சிற்றூர்தி தரிப்பு நிலையத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நாளை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரும், தேசிய போக்குவரத்து ஆணைக் குழுத் தலைவருமான செ.பத்மநாதன் பஸ் தரிப்பு நிலையத்துக்கான அடிக்கல்லை நாட்டிவைப்பார்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உதவி!



(யாழ்ப்பாணம்)

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உடனடி மனிதாபிமான உதவிகளைச் செய்து வருகின்றது.

சங்கானைப் பிரதேசத்தில் ஜே-157 கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் 30 குடும்பங்களுக்கும் கொழும்புத்துறைப் பிரதேசத்தில் - ஜே-61 கிராம அலுவலர் பிரிவில் வாழும் 52 குடும்பங்களுக்கும், ஜே-62 கிராம அலுவலர் பிரிவில் வாழும் 111 குடும்பங்களுக்கும் அரிசி, மா, சீனி, பருப்பு போன்ற உலர்உணவுப் பொருட்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கிவருகின்றது.

இந்த நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழக யாழ்.மாவட்டப் பணிப்பாளர் சு.ஜெயராஜ், கிராம அலுவலர்கள் மற்றும் தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள் மீண்டும் யாழ். பல்கலைக்கழகத்தில்!

செயல்திறன் அரங்க இயக்கத்தால் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் பாதிக்கப்பட்ட பெண்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக "பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்" என்ற நாடக ஆற்றுகை நாளை மாலை 3.30 மணிக்கு மீண்டும் கைலாசபதி கலையரங்கில் மேடையேறவுள்ளது.

தே.தேவானந்தின் நெறியாள்கையில் 75 இற்கு மேற்பட்ட கலைஞர்கள் பங்குபற்றும் இந்த நாடக ஆற்றுகை 20 இற்கு மேற்பட்ட பிரதேசங்களில் மேடையேற்றத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எமது ஆத்மாக்களின் உள்ளக் கிடக்கைகளையும் நம்ப மறுக்கின்ற யதார்த்த நிலைப்பாடுகளையும் சித்தரிப்பதாக பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள் நாடக ஆற்றுகை உள்ளதாக செயல்திறன் அரங்க இயக்குனரும் நெறியாளருமான தே.தேவானந் தெரிவித்தார். (91)

# திருவாசக விழா சொற்பொழிவு!

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் நடத்திவரும் திருவாசக விழா சொற்பொழிவுத் தொடர் நாளை மாலை 5 மணிக்கு மட்டுவில் மகா காளி அம்பாள் தேவக் கோட்டத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் - "கண்ணைத் துயின்று அவமே. காலத்தைப் போக்காதே" என்ற பொருளில் வலிகாமம் வலய ஆசிரிய ஆலோசகர் கந்த சத்தியதாசன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

# 100 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்!

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் அறங்காவலர் சபையினரால் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட 100 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வடமராட்சி - அம்பன் அ.த.மெ.மி. பாடசாலை, தும்பளை சிவப்பிரகாச வித்தியாசாலை, கட்டைவேலி யாக்கரு வித்தியாலயம், கற்கோவளம் அ.மி.பாடசாலை, புற்றளை மகாவித்தியாலயம், துன்னாலை அ.த.க. பாடசாலை, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம், துன்னாலை மேற்கு அ.மி.த.க. பாடசாலை, புலோலி அ.மி.க.பாடசாலை, சித்தி விநாயகர் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கே கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

# அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டத்தில் சகல வசதிகளுடனும் கூடிய 3 மாடிகளைக் கொண்ட 50 மில்லியன் செலவில் மாவட்ட பொது நூலகத்தினை அமைக்கும் முகமாக வரைபடம் ஒன்றை சமர்ப்பிப்பதற்கான தகுதியான, அங்கீகரிக்கப்பட்ட கட்டடக் கலைஞர்கள் எமது சபையுடன் தங்கள் சான்றிதழ்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பொன்.நித்தியானந்தம்
விசேட ஆணையாளர்.
கரைச்சிப் பிரதேசசபை.
கிளிநொச்சி.

(C/3521)


**நாதன்ஸ்** யாழ்ப்பாணம். (குளிரூட்டப்பட்டது)

இன்று மட்டும்
கா.நேரம் 10.30. 2.30, 6.30, 9.30 (பு.நே)
மம்முட்டி, நந்திதாதாஸ் நடித்த
**விஷ்வதுளசி**
(ரீல்ஸ்)
தினசரி - 6.30, 9.30 (பு.நே)

**திறைஞ்சனாஸ்** சங்கானை

தனுஷ், தியா நடித்த
**ட்ரீம்ஸ்**
(ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
THE MUMMY RETURNS

**நாகம்ஸ்** சுன்னாகம்

இலங்கையிலும்
இந்தியாவிலும்
ஒரேதின வெளியீடான
அர்ஜுன் (இருவேடம்),
சாயாசிங்,
லைலா,
வடிவேல் நடித்த



**ஜெய் சூர்யா**
கா.நே 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)
முற்பதிவுகளுக்கு நாகம்ஸ் சினிமா, யாழ்.பெயின்
காடின் - 326, K.K.S.றோட் யாழ்ப்பாணம்

**ராஜா** யாழ்ப்பாணம்.

ரசிகப் பெருமக்களுக்கு
எமது நத்தார் வாழ்த்துக்கள்
அர்ஜுன், ரீமாசென், வடிவேல்,
தேவயானி, பிரகாஸ்ராஜ்
**கிரி** (ரீல்ஸ்)
(இயக்கம் சுந்தர்C)
புதிய நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)


# சிறு விளம்பரம்

**உங்கள் கவனத்துக்கு!**

யாழ். பிரதான வீதி, 262 சுற்றாடல் இடம்பெயர்வின்போது 3 கதவு அலுமாரியும் சிறிய கப்போட்டும் இடம்மாறி எனது வீட்டில் 2 வருடமாக உள்ளன.

உரித்துடையோர் 262, பிரதான வீதியில் வசிக்கும் கமலாதேவி தயாவுடன் தொடர்புகொண்டு ஆவண செய்து பெற்றுக்கொள்ளவும்.

தகவல்:செ.ஸ்ரீகிருஷ்ணபாலன்
(1004)

## விற்பனைக்கு

ஊர் பேட்டுக் கோழி ஆறுடன், இரண்டு தட்டு புதிய கோழிக்கூடு விற்பனைக்குண்டு.

க.ரவீந்திரன்,
C/0 ந.துரைமணி,
தொகுதிப்பண்ணை,
கோப்பாய் மத்தி (மாவீரர் துயிலும் இல்லம் அருகில்), கோப்பாய்.(1005)

# ஆண்டொன்று கரைந்தது...



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 05 | 25 |
| 11 | 12 |
| 1937 | 2003 |

## அமரர் பத்திநாதர் மரியதாஸ் அவர்கள்

(இராசதுரை) – சில்லாலை.

அன்பினாலும், அறிவினாலும் எமை வளர்த்த
அன்புத் தெய்வமே!
நீங்கள் தந்த அறிவினால்
உலகத்தை அறிகிறோம்.
அன்பினால்.....
இன்பத்தை அறிகிறோம்.
உங்கள் இரண்டு நினைவுகளோடு.

உங்கள் நினைவில் தவிக்கும் – குடும்பத்தினர்.

# வீரவணக்கம்



## கடற்புலி லெப்.கேணல் மறவன் மாஸ்ரர்

(எகியாஸ்பிள்ளை ஸ்ரனிஸ்லாஸ், தாளையடி).

(மேலாளர், கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசங்கள் - சம்மேளனங்கள்)

தமிழ் இனத்தைத் தலைநிமிர்த்திய தன்னிகரற்ற
தலைவனின் வழிக்கு வலுச்சேர்த்த தமிழ் மறவனே!
அன்பாகவும், பண்பாகவும், குஞ்சுகளே, செல்லங்களே குழந்தைகளே
என அழைக்கும் அன்பானனே! கடற்புலிகளின் களமாடும் வேங்கையே!
கடற்றொழிலாளர்களின் கலங்கரை விளக்கே!
உமது திடீர் மரணம் கேட்டு நாம் அனைவரும் கண்ணீர்க்
கடலில் கதியற்று நின்றவர்போல் நிற்கின்றோம்.
உமது பிரிவால் ஆறாத்துயருறுகின்றோம்.
உமது வித்துடல் தமிழ் மண்ணில் விதையாகி விழுதாகும்
என்பதில் ஐயமில்லை.

கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கமும், அதன் கிளைகளும். நெடுந்தீவு.

(C/3518)

# பொய் சொல்வதில் முன்னணி வகிக்கும் அரசியல்வாதியாக விமல் வீரவன்ச

## ராஜித சேனாரத்ன தெரிவிப்பு



இலங்கை அரசியல் வரலாற்றில் - பொய்சொல்வதில் முன்னணி வகிக்கும் இடதுசாரி அரசியல்வாதியாக ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச வளர்ச்சியடைந்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஐக்கிய தேசியக்கட்சித் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் - விமல் வீரவன்சவைப் போல் பொய் சொல்லும் இடதுசாரித் தலைவர்கள் கடந்த காலத்தில் இருக்கவில்லை என்றும்,

இவர் கூறிவரும் பொய் காரணமாகத் தற்போதைய அரசாங்கம் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இந்தியக் கலைஞர்கள் நிகழ்ச்சியில் இடம்பெற்ற குண்டுவெடிப்புக்கு, ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தான் பொறுப்பு என அரச ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

தற்போது இந்தக் குண்டு வெடிப்புத் தொடர்பான தகவல் தருபவர்களுக்கு, ரூபா 10 லட்சம் சன்மானம் வழங்கப்படும் எனப் பொலிஸ் மா அதிபர் அறிவித்துள்ளார்.

அப்படியானால் அந்தச் சன்மானத்தை அரசாங்க ஊடகங்களுக்கு அவர் வழங்கவேண்டும்.

சர்வதேச சமூகத்துக்கு ,இது வரை காலமும் அரசாங்கம் கூறி வந்த பொய்கள் முடிவு வந்து விட்டது. இந்த நிலையில் மேலும் பொய் கூறுவதை அரசாங்கம் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

வடக்கு - கிழக்கில் யுத்த சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகச் சுவரொட்டிகள் காணப்படுகின்றன. அரசாங்கத்தைப் பொறுத்தவரை சர்வதேச சமூகத்தை எதிர்த்துக்கொண்டு, யுத்தம் செய்ய முடியாத நிலையில் ஒரு புறமும், ஜே.வி.பியின் பிற்போக்கு நடவடிக்கை காரணமாகச் சமாதானத்தை முன்னெடுக்க முடியாமல் மறுபுறமும் தத்தளிக்கிறது என்று டாக்டர் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்தார்.

# வவுனியா - கொழும்பு ரயிலில் மோதுண்டு யானை பலி!



வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிச்சென்ற ராஜரட்டை ரயிலில் மோதுண்டு ஒரு யானை உயிரிழந்ததுடன், மேலும் இரண்டு யானைகள் பலத்த காயமடைந்தன.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை அநுராதபுர மாவட்டத்திலுள்ள அம்பன் பொலவுக்கும், ஹல்கமுவ வீதிக்கும் இடைப்பட்ட பகுதியில் நடைபெற்றது.

இந்த யானைகளுடனான விபத்தையடுத்து, 500 பயணிகளுடன் சென்ற ரயில் தண்டவாளத்தை விட்டு விலகிச் சென்ற போதிலும் பயணிகள் எவருக்கும் காயமேற்படவில்லை.

கடந்த மூன்று வாரத்துக்கு முன்னரும் இந்தப் பகுதியில் இதே மாதிரியான சம்பவம் நடைபெற்றதால், இந்தப் பகுதியால் மிகவும் கவனமாகச் செல்லுமாறு ரயில் சாரதிகளுக்கு அறிவுறுத்தப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது ஒரு மிகப் பெரிய துயரமான விபத்தெனவும், இதில் ஒருவரையும் குற்றஞ்சாட்ட முடியாதெனவும் மாவட்ட ரயில்வே அதிகாரி லால் சில்வா தெரிவித்தார். இலங்கையில் ஒவ்வொரு வருடமும் விவசாயிகளின் துப்பாக்கித் தாக்குதல் மற்றும் மின்சாரத் தாக்குதல்களால் 150 யானைகள் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மட்டக்களப்புச் சூட்டுச்சம்பவம் சடலம் அடையாளம் காணப்பட்டது!

மட்டக்களப்பு நகரிலுள்ள அரசடிச்சந்தியில் கடந்த புதன்கிழமை பிற்பகல் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞர் - உன்னிச்சை 8 ஆம் கட்டையைச் சேர்ந்த கந்தசாமி சதீஸ் (வயது - 22) என உறவினரொருவரால் அடையாளம் காணப்பட்டது.

சடலத்தை அடையாளம் காட்டிய சின்ன ஊறணியைச் சேர்ந்த சிறிய தாயாரான நடராஜா தவமணி, இவர் முன்னர் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தவர் என தெரிவித்தார்.

தனது வீட்டில் வசித்து வந்த இவர் - கடந்த 2 வார காலமாக புதிதாக ஒரு இளைஞருடன் அறிமுகமாகி, வெளியே அடிக்கடி சென்று வந்தார் என்றும், சம்பவ தினம் அன்றும் அவருடன் சென்றதாக மட்டக்களப்பு பொலிஸாரிடம் தெரிவித்தார்.

இந்தக் கொலை தொடர்பாகப் பொலிஸார் மேற்கொண்டுள்ள விசாரணையின் படி, மோட்டார் சைக்கிளில் இவருடன் வந்த இளைஞராலேயே இவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என சந்தேகம் எழுந்துள்ளது.

மோட்டார் சைக்கிள் திறப்பு மற்றும் ஆவணங்கள் அனைத்தும் அந்த இளைஞரால் கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என்றும், அவர் பற்றிய தகவல்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## அரசியல் நடவடிக்கைக்காக

# நாய்களைப் பயன்படுத்தியதற்கு விலங்குகள் உரிமைக்குழு கண்டனம்!

தமது அரசியல் நடவடிக்கைகளுக்காக விலங்கினங்களை ஐக்கிய தேசியக் கட்சி பயன்படுத்தியதை, இலங்கையின் விலங்குகளுக்கான உரிமைகள் குழு கடுமையாகக் கண்டனம் தெரிவித்துள்ளது.



இது தொடர்பாக அந்தக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

ஐக்கிய தேசியக் கட்சி நடத்திய எதிர்ப்பு ஊர்வலத்தில், ஊனமுற்ற நாய்கள் உட்பட, பல நாய்கள் இழுத்துச் செல்லப்பட்டதைக் கண்டு, நாம் மிகவும் அதிர்ச்சியடைந்தோம். தமது அரசியல் நடவடிக்கைக்காக அப்பாவி விலங்கினங்களைப் பயன்படுத்துவதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அரசியல்வாதிகளின் ஆதரவாளர்கள் - ஒழுக்க விதிகளை மீறி, விலங்கினங்களை துஷ்பிரயோகம் செய்து, அவற்றுக்கு உடைகளை அணிவித்து பொதுமக்கள் மத்தியில் தமது அரசியல் சந்தர்ப்பவாதத்துக்காக இழுத்துச் செல்கின்றனர். இது கண்டிக்கத்தக்கது.

எனவே இதை மேற்கொள்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கெதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு நாம் மேல்மாகாண முதலமைச்சரையும், பொலிஸாரையும் கேட்டுக் கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை

# நாற்பத்தெட்டு மணித்தியாலம் தடுத்துவைத்து விசாரணை செய்யப் பொலிஸாருக்கு அதிகாரம்

(கொழும்பு)

குற்றச்செயல்களில் ஈடுபடும் சந்தேக நபர்களை 48 மணித்தியாலங்கள் தடுத்துவைத்து விசாரணை செய்யும் அதிகாரத்தைப் பொலிஸாருக்கு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

அரசு கொண்டுவரவுள்ள குற்றவியல் சட்டத்திலிருந்து, வரைபில் பொலிஸாருக்கான இந்த அதிகாரத்தைச் சட்டமாக்குவதற்கு, ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலிருந்து தீர்மானிக்கப்பட்டது.

குற்றங்களைக் கட்டுப்படுத்தி, சட்டத்தைப் பலமாக்கும் நோக்கத்துடன், சட்டத்தில் திருத்தம் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தச் சட்டதிருத்தத்துக்கென மேற்பார்வை செய்வதற்காக நியமிக்கப்பட்ட நிதி அமைச்சர் ஜோன் செனிவிரட்ன தலைமையிலான அமைச்சரவை உபகுழு, குற்றச்செயல்களில் ஈடுபடும் சந்தேக நபர்களை 48 மணித்தியாலங்கள் தடுத்துவைத்து விசாரணை செய் வதற்குப் பொலிஸாருக்கு அதி காரம் வழங்குவதுடன், இந்தப் பரிந்துரையை இரண்டு வருடங்களுக்கு அமுல்படுத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை - குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களை 72 மணித்தியாலங்கள் தடுத்துவைத்து, விசாரணை செய்வதற்குப் பொலிஸாருக்கு அதிகாரம் வழங்குவதாகவும் ஆமோதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (தே)

# சிங்களக் குடும்பங்களுக்கும் புனர்வாழ்வுக்கழகம் உதவி!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ள நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - சின்னவத்தைக் கிராமத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள 150 சிங்களக் குடும்பங்களுக்கும் நிவாரணங்களை வழங்கியது.

வெள்ளத்தால் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ள இந்தக் கிராமத்துக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உலர் உணவுப் பொருட்களும், வைத்திய உதவிகளுமே முதன்முதலில் கிடைத்துள்ளது.

இதேவேளை - மட்டக்களப்பு தமிழ் வர்த்தகர்கள் நேற்றுமுன்தினம் ஈச்சந்தீவு கிராமத்திலும், நேற்று நவகிரி கிராமத்திலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கினர். இவர்களின் ஏற்பாட்டில் வைத்திய முகாம்களும் நடைபெற்றன.

இதற்கிடையில் செங்கலடி பிரதேசத்திலுள்ள ரமேஷ்புரம் கிராம மக்கள் தங்களுக்கு இதுவரை அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளின் நிவாரண உதவிகள் எதுவும் கிடைக்கவில்லை எனக் கூறுகின்றார்கள். இதற்கு தங்களுடைய எதிர்ப்பை வெளிக்காட்டும் வகையில் நேற்றுமுன்தினம் வாசக அட்டைகளை ஏந்தியவாறு பிரதேச செயலகம் முன்பாக நடத்திய மறியல் போராட்டம் காரணமாக, செயலகத்தின் பணிகள் சுமார் இரண்டு மணிநேரம் தடைப்பட்டிருந்தது.

இது ஒருபுறமிருக்க திருகோணமலை ஈச்சிலம்பத்தைக் கிராமத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கான நிவாரணப் பணிகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஈடுபட்டுள்ளது.

## இலத்திரனியல் முறையிலான தேர்தல் குறித்து ஆராய

# கட்சித் தலைவர்கள் குழுவொன்று வெளிநாடுகளுக்குச் செல்லவுள்ளது

(கொழும்பு)

இலத்திரனியல் முறை மூலம், இலங்கையில் தேர்தலை நடத்துவது குறித்து, ஆராய்வதற்காகக் கட்சித் தலைவர்கள் குழுவொன்று வெளிநாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ளவிருப்பதாகத் தெரியவருகிறது.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தலைமையில் - இந்தியா, அமெரிக்கா, கனடா, ஜேர்மனி மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளுக்கு இந்தக் குழுவினர் விஜயம் செய்யவுள்ளனர்.

தற்போது இலத்திரனியல் வாக்குப் பதிவை வெற்றிகரமாகச் செயற்படுத்தும் இந்த நாடுகளின் தேர்தல் நடைமுறை குறித்து, இந்தக் குழுவினர் ஆராயவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலத்திரனியல் முறைமூல வாக்களிப்பை அறிமுகப்படுத்துவதற்கு ஏற்றவகையில், தேர்தல் திருத்தச் சட்டமூலம் மாற்றியமைக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன கூறியுள்ளார்.

# பங்களாதேஷ் கிரிக்கெட் வளர்ச்சியில் ஐ.சி.சி. அக்கறை செலுத்தவில்லை!

## வசீம் அக்ரம் விசனம்



பந்து வீச்சாளர்களின் கை எந்தளவு வளைகிறது என்பதில் காட்டுகின்ற அக்கறையை சர்வதேச கிரிகெட் சபை, பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் வளர்ச்சியில் எந்த அக்கறையும் காட்டுவதில்லை என்று பாகிஸ்தானின் முன்னாள் வேகப் பந்துவீச்சாளரும், அணித் தலைவருமான வசீம் அக்ரம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் -

இந்தச் சிறிய நாட்டில் கிரிக்கெட்டை வளர்ப்பதற்குச் சர்வதேச கிரிக்கெட் சபை இதுவரை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? என்னைக் கேட்டால் பங்களாதேஷுக்கு மிகப்பெரிய அநீதி இழைக்கப்படுகிறது என்றுதான் சொல்லுவேன்.

காரணம் எந்தவித அடிப்படை வசதிகளையும் செய்துகொடுக்காமல் திடீரென டெஸ்ட் அந்தஸ்து அந்த அணிக்கு வழங்கப்பட்டிருக்கிறது. பெரிய பெரிய ஜாம்பவான்கள் மோதும் குத்துச்சண்டைக் களத்தில் சின்னப்பையனை இறக்கிவிட்டதுபோல மாட்டிக்கொண்டு முழிக்கிறது அந்த அணி. பந்து வீச்சாளர்கள் கை எந்தளவுக்கு வளைகிறது என்பதில் காட்டும் அக்கறையை, பங்களாதேஷின் கிரிக்கெட் வளர்ச்சிக்கு ஐ.சி.சி காட்டுவதில்லை என்பதுதான் பரிதாபம்.

ஐ.சி.சி யின் நோக்கம் கிரிக்கெட்டை வளர்ப்பது மட்டுமே. வழங்கப்பட்ட டெஸ்ட் அந்தஸ்தை ரத்துச்செய்வது, கிரிக்கெட்டுக்கு எந்த விதத்திலும், உகந்ததாக இருக்காது. அதற்குப் பதிலாகச் செய்ய வேணடிய சில விடயங்கள் இருக்கின்றன. பங்களாதேஷின் கிரிக்கெட் வளர்ச்சிக்கு என்று பெரிய தொகையை ஐ.சி.சி ஒதுக்கவேண்டும் அங்கு கிரிக்கெட் ஆரம்பகட்டத்தில் இருந்து முறையாக வளர்க்கப் படவேண்டும். அப்படிச் செய்தால் மட்டுமே பங்களாதேஷ் அணி கிரிக்கெட்டில் முக்கியத்துவம் பெறமுடியும்.

இன்னொரு விடயமும் இருக்கிறது. பலம் வாய்ந்த அணிகளுடன், மட்டுமே மோதிக்கொண்டிருபபதும் பங்களாதேஷ் அணியின் வளர்ச்சிக்குப் பெரிதாகப் பலனளிக்கப் போவதில்லை. மாறாக பெரிய பெரிய தோல்விகள் பங்களாதேஷ் வீரர்களின் தன்நம்பிக்கையைக் குலைக்கவே செய்யும்.

ஆகவே, அவர்கள் தகுதிக்கேற்ப கென்யா, கனடா, ஹொலண்ட போன்ற அணிகளுடன் நிறைய விளையாடவேண்டும். நான்கு நாள் போட்டிகளில் அதிகளவு பங்கேற்க வேண்டும்.

பங்களாதேஷ் அணிக்கு இப்போது தேவைபடுவது சில வெற்றிகளே. சிறிய அணிகளுக்கு எதிராக விளையாடினால் மட்டுமே அது கிடைக்கும். வெற்றிகள் வந்து சேரும்போது வீரர்களுக்குத் தன்னம்பிக்கை தானாகவரும். அடுத்தடுத்து வெற்றிகளைத் தக்கவைத்துக்கொள்ளும் ஆர்வமும் வரும்.

இதைச் செய்தால் மட்டுமே கிரிக்கெட்டை வளக்கமுடியுமே தவிர டெஸ்ட் அந்தஸ்தினை ரத்து செய்வது பற்றிப் பேசுவதால் ஒரு பயனும் இல்லை என்று தெரிவித்தார்.



மட்ரிட்டில் ஸ்பானிஸ் லீக் உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் செவிலா அணி 1 - 0 என்ற கோல் கணக்கில் ரியல் மட்ரிட் அணியை வீழ்த்தியது. ரியல் மட்ரிட் அணியின் நட்சத்திர வீரரான டேவிட் பெக்காமை (இடது) தடுத்துவிழச்செய்கிறார் செவிலா அணியின் டேவிட் கஸ்ரோ.

# இன்னொரு வீரர் ஆடுகளத்தில் மரணம்

(வடோதரா)

குஜராத் மாநில மின்சாரசபை கிரிக்கெட்அணியின் தொடக்க ஆட்டக்காரர் பரத் வியாஸ் ( வயது 46) மாரடைப்பினால் ஆடுகளத்திலேயே உயிரிழந்தார்.

கடந்த வியாழனன்று 'யூத் சேவீஸ் சென்ரர்' என்ற அணிக்கு எதிராக அவர் ஆடிக்கொண்டிருந்தார். 8 மணி நேரத்துக்கும் மேலாக அவர் தொடர்ந்து ஆடுகளத்திலேயே நின்று கொண்டிருந்தார்.

ஆட்டம் முடியும்போது மார்பு வலிக்கிது என்று கூறியபடியே தரையில் வீழுந்தார். சக வீரர்கள் அவரை அருகில் உள்ள மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். அதற்குள் அவரது உயிர் பிரிந்துவிட்டது.

# சிறந்த வீராங்கனையாக ரஷ்யாவின் எலீனா தெரிவு



(மொஸ்கோ)

இந்த ஆண்டின் சிறந்த ரஷ்ய தடகள வீராங்கனையாக எலீனா இசின்போவா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

போல்வோல்ட் வீராங்கனையான இவர் ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் தங்கம்பெற்றதோடு, புதிய உலக சாதனையும் (4.91 மீற்றர்) படைத்தார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் பிரஸ்ஷல்சில் நடந்த போட்டியில் அவர் 4.92 மீற்றர் தூரம் தாண்டி புதிய உலக சாதனை படைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பங்களாதேஷ் அணியை பாராட்டுகிறார் கங்கூலி!



பங்களாதேஷ் அணி வீரர்களின் ஆட்டம் பாராட்டும்படி இருந்தது. நாணயச்சுழற்சியில் வென்று அந்த அணி முதலில் பந்துவீச எடுத்த முடிவு சரியானது. ஏனென்றால் காலையில் ஆடுகளம் பந்துவீச்சுக்குச் சாதகம் அளிக்கும் வகையில் இருந்தது. காலையில் துடுப்பாட்டம் செய்வது கடினமாக இருந்தது. காலித் மசூத் ஆட்டம் நன்றாக இருந்தது என இந்திய அணித் தலைவர் கங்கூலி தெரிவித்தார்.

இதேவேளை பங்களாதேஷ் அணித் தலைவர் ஹபிபுல்பசார் -

எங்கள் அணி வீரர்களின் ஆட்டம் சிறப்பாக இருந்தது. இது மகிழ்ச்சியை அளிக்கிறது. தொடக்கத்தில் 3 விக்கெட் சரிந்தாலும், எங்களால் நன்றாக ஆடமுடிந்தது. இனிவரும் போட்டிகளிலும் எங்கள் அணி வீரர்கள் இதேமாதிரிச் சிறப்பாக ஆடுவார்கள். சிம்பாப்வேக்கு எதிரான தொடரில் சவால்விடும் வகையில் ஆடமுடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## ஒலிம்பிக்கில் பதக்கம் பெற்ற

# கிறீஸ் வீரர், வீராங்கனைக்கு தற்காலிகமாகத் தடை விதிப்பு

(ஏதென்ஸ்)

கிரேக்கத்தைச் சேர்ந்த தடகள நட்சத்திரங்களான காஸ்டாஸ் கெந்தரிஸ், கதரினா தானோவ் ஆகியோர் போட்டிகளில் பங்கேற்கச் சர்வதேசத் தடகள சம்மேளனம் தற்காலிகமாகத் தடைவிதித்துள்ளது.

கடந்த ஓகஸ்டில் நடைபெற்ற ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிக்கு முன்னதாக இவர்கள் இருவரும் ஊக்கமருந்துப் பரிசோதனையில் பங்கேற்கவில்லை. அதுகுறித்து சர்வதேச சம்மேளனம் அதிருப்தி தெரிவித்துவந்தது.

இந்த நிலையில் மான்டி கார்லோ தலைமையகத்திலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இருவரும் போட்டிகளில் பங்கேற்கச் சம்மேளனம் தற்காலிகத் தடை விதித்துள்ளது

சிட்னியில் 2000 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் ஆண்களுக்கான 200 மீற்றரில் கெந்தரிஸ் தங்கப்பதக்கத்தையும், மகளிருக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் தானோவ் வெள்ளிப்பதக்கத்தையும் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

# அவுஸ்ரேலியா செல்கிறது மேற்கிந்திய தீவுகள் அணி



(சிட்னி)

வீரர்களின் ஒப்பந்தக் கோரிக்கையில் மத்தியஸ்தரின் முடிவை மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபையும், வீரர்கள் சங்கமும் ஏற்றுக் கொண்டுள்ளன.

இந்தப் பிரச்சினை காரணமாக அடுத்த மாதத்தில் அவுஸ்ரேலியாவிற்கு - மேற்கிந்தியத் தீவுகள் அணி சுற்றுப்பயணம் மேற்கொள்ளுமா என்பது கேள்விக்குறியாக இருந்தது.

தற்போது மத்தியஸ்தர் அட்ரியன் சாண்டர்ஸின் முடிவை இரு தரப்பும் ஏற்றுக்கொண்டுள்ளபோதும் முடிவு என்ன என்பது வெளியே சொல்லப்படவில்லை.

## பாகிஸ்தான் வீரர் லத்தீப் மீதான தண்டனை குறைப்பு

(கராச்சி)

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் ரஷீத் லத்தீப் மீதான தடையை ஒரு மாதமாக அந்நாட்டு கிரிக்கெட சபை குறைத்துள்ளது.

நவம்பரில் உள்ளூர் கிரிக்கெட் போட்டியில் ஆடுவதற்கு லத்தீப் மறுத்ததால் அவருக்குத் தடை விதிக்கப்பட்டது. தற்போது லத்தீப்பின் விளக்கங்களைக் கேட்டபின்பு கிரிக்கெட் சபை முடிவை மாற்றிக் கொண்டுள்ளது

கராச்சி மைதானம் சரியாக இல்லையென்பதால் விளையாடுவதைத் தவிர்த்ததாக லத்தீப் கூறினார். தனது செய்கை குறித்து கிரிக்கெட் சபையிடம் அவர் வருத்தம் தெரிவித்திருக்கிறார்.

ஒரு மாதகாலத் தடைக்குப் பின்பு, பாகிஸ்தான் அணி தேர்வு செய்யப்படும்போது லத்தீப்பின் பெயரும் பரிசீலிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## விளையாட்டு

# மூன்றாவது டெஸ்டில் லாங்கர் ஆடுவாரா?



பாகிஸ்தான் கிரிக்கெட் அணி அவுஸ்ரேலியாவிற்குச் சுற்றுப்பயணம் செய்து விளையாடிவருகிறது. 3 டெஸ்ட் போட்டித் தொடரில் பெர்த்தில் நடந்த முதல் டெஸ்டில் அவுஸ்ரேலியா 491 ஓட்ட வித்தியாசத்தில் அபாரவெற்றி பெற்றது. 2 ஆவது டெஸ்ட் போட்டி நாளை மெல்பேர்னில் தொடங்கவுள்ளது.

இதில் அவுஸ்ரேலிய அணியின் தொடக்க ஆட்டக்காரர் ஜஸ்டின் லாங்கர் விளையாடுவதில் சந்தேகம் எழுந்துள்ளது. பயிற்சியின் போது அவருக்கு முதுகில் காயம் ஏற்பட்டது இதனால் அவர் விளையாடுவதற்கான வாய்ப்புக் குறைவே. அவர் ஆடாவிட்டால் சைமன் கடிச் இடம்பெறுவார்.

பெர்த் டெஸ்டில் லாங்கர் முதல் இனிங்சில் 191 ஓட்டங்களும், 2 ஆவது இனிங்சில் 97 ஓட்டங்களும் எடுத்தார். இந்த ஆண்டில் டெஸ்டில் அதிக ஓட்டங்கள் (1426) எடுத்தவர் லாங்கர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பெப்ரவரி 20 இல் சென்னை மரதன்

(டெல்கி)

மரதன் 2005 போட்டி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது. ஆண்கள் பிரிவில் சம்பியன் பட்டம் வெல்பருக்கு ரூ 2 லட்சமும், மகளிர் பிரிவில் முதலிடம் பெறுபவருக்கு ரூ 1 லட்சமும் பரிசாக வழங்கப்படும்.

இந்த ஆண்டுக்கான சர்வதேச மரதன் போட்டி அட்டவணையிலும் சென்னை மரதன் இடம்பெற்றுள்ளது. கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த முறை அதிகபட்சமாக 20 ஆயிரம் பேர்வரை கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

மரதன் போட்டிகளின் முன்னிலையில் உள்ள கெனயா, எதியோபபியா போன்ற நாடுகளில் இருந்தும், வர, வீராங்கனைகள், பங்கேற்கவுள்ளனர்.

# கொக்கும் புத்திசாலி நண்டும்




இங்கே மடிக்கவும்



# துருவன்

## சிறுவர் அரங்கம்



அன்புக்குரிய சிறுவர்களே!

பாடசாலை நாட்களில் காலையில் எழுந்ததும் பல்துலக்கி, நீராடி, உணவருந்தி பாடசாலை செல்ல ஆயத்தமாவீர்கள். அதன்பின்னர்தான்- சீருடை, சப்பாத்து, பாடசாலைக் கொப்பிகள், புத்தகங்கள், பென்சில், பேனா போன்றவற்றைத் தேடுவீர்கள். அங்கொன்றும், இங்கொன்றுமாக இருப்பவற்றைத் தேடி எடுக்க வேண்டும்.

சிலருக்கு வீட்டிலுள்ளவர்கள் தேடிக் கொடுக்க வேண்டும். இது பாடசாலை நாட்களில் உங்களுக்கு ஏற்படும் பரபரப்பு. இதற்கு என்ன காரணம்?

உங்களுடைய பொருட்களை அவற்றுக்குரிய இடங்களில் வைக்காததே காரணம். எனவே ஒவ்வொரு பொருட்களையும் அதற்குரிய இடங்களில் வைக்கும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள். இதனால் காலை நேரப் பரபரப்பு இல்லாமல் போகும். நேரமும் மிச்சமாகும்.

பாசமுடன் சாரு அக்கா



## அன்பு

அன்பை நாம் விதைத்திடுவோம்.
அறுவடையாகும் இன்பமடா
அன்பை நாங்கள் மதித்திடுவோம்
அகன்று விலகும் துன்பமடா.

அன்பு ஒன்றே தரணியிலே
அனைத்து மதங்களின் அடிப்படை
இன்பம் அதனால் கிடைத்துவிடும்
என்பது ஒன்றே வெளிப்படை.

அன்பைப் பரஸ்பரம் பகிர்ந்திடுவோம்
அன்பு செய்து மகிழ்ந்திடுவோம்
அன்பை நாளும் பயின்றிடுவோம்
அன்பை அன்பால் வென்றிடுவோம்.

டபிள்யு.கிறிஸ்டினா டியுலக்ஷி,
தரம் 9,
உடுவில் மகளிர் கல்லூரி.

## நத்தார் நல்வாழ்த்துக்கள்

# ஏமாந்த பண்ணையார்



ஒரு கிராமத்தில், இசக்கிமுத்து என்றொரு படிக்காத பணக்காரர் வாழ்ந்து வந்தார். அவர் தங்கத்தினால் செய்த ஒரு வெற்றிலைப் பெட்டி வைத்திருந்தார். அந்தப் பெட்டியில் நிறையப் பணம் இருக்கும். அவர் தன்னைப் பெரிய அறிவாளி என்று நினைத்துக் கொண்டிருந்தார்.

தினமும் தனது வீட்டுத் திண்ணையில் அமர்ந்து கொள்ளுவார். வெற்றிலை போட்டபடி தெருவில் வருவோர், போவோரை அழைத்துத் தன்பக்கத்தில் வைத்துக் கொண்டு, பல கதைகள் அளந்துவிடுவார். அதையெல்லாம் அவர்கள் கேட்கவேண்டும். அதன் பின்னர்தான், அவர்களைப்போக அனுமதிப்பார்.

ஒருநாள் வெகு நாட்களுக்குமுன் அவரிடம் வேலை பார்த்த 'வேதா' என்பவன் தெருவில் வந்தான். தனது எஜமானரைக் கண்டதும், அவர் அருகே பணிவோடு வந்து வணங்கினான். "வேதா, ஏன் இத்தனை நாட்களாக இந்தப் பக்கம் வரவில்லை?" - என்று கேட்டார். 'நகரத்துக்குப் போயிருந்தேன்' என்றான் வேதா.

'அங்கு என்னென்னவெல்லாம் கற்றுக் கொண்டு வந்திருக்கிறாய்?' - என்று பணக்காரர் கேட்டார். 'நான் அங்க வட்டாட்டம், சதுராட்டம், நீட்டோட்டம், கற்றுக் கொண்டேன்' - என்றான் வேதா.

பணக்கார எஜமானாருக்கு ஆச்சரியமாகப் போய் விட்டது. இது என்னடா புதுப்புது வித்தையாயிருக்கே! என்று ஆவலோடு கேட்டார்.

அதற்கு வேதா 'அந்த வித்தைகளைக் காட்டவேணும் என்றால் என் தலையில் ஏதாவது பாரமாக வைக்க வேண்டும். உங்களுடைய வெற்றிலைப் பெட்டியைத் தாருங்கள். வித்தையைக் காட்டிவிட்டுத் தருகிறேன்' - என்றான்.

தங்கத்தால் செய்த தனது வெற்றிலைப் பெட்டியை, நன்றாகப் பூட்டிவிட்டுச் சாவியைத் தன் கையில் வைத்துக் கொண்டு, பெட்டியை வேதாவிடம் கொடுத்தார் பணக்கார எஜமான்.

உடனே பெட்டியைத் தலையில் வைத்துக்கொண்டு வட்டம், வட்டமாக ஓடிவந்து, 'இதாங்க வட்ட ஓட்டம்' என்றான் வேதா. 'சபாஷ்... சபாஷ்...' என்றார் எஜமான். பின்பு சதுரம், சதுரமாக ஓடிவிட்டு 'இதுதான் சதுராட்டம்' - என்றான் வேதா. 'சபாஷ்... சபாஷ்...' என்று பலமாகத் தலையை ஆட்டினார், எஜமானார்.

"எஜமான் இப்போது நீட்டோட்டம் காட்டப் போகிறேன். ரொம்ப வேடிக்கையாக இருக்கும் என்றதும், உடனே 'எங்கே! எங்கே! அந்த நீட்டோட்டத்தை ஆடிக் காட்டு என்றார் எஜமான்.

தலையில் இருந்த தங்க வெற்றிலைப் பெட்டியை நன்றாகப் பிடித்துக்கொண்டு 'இதுதான் நீட்டோட்டம்...' என்று கூறியவாறு வேகமாகத் தெருவில் ஓடினான். வேதா. ஓடிக் கொண்டிருந்தவனைச் சிறிது நேரத்தில் காணவில்லை.

இதையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பக்கத்து வீட்டுக்காரர்கள் 'வெற்றிலைப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு ஓடுறான். அது தகரப் பெட்டியென்றால் பரவாயில்லை. தங்கப் பெட்டியாயிற்றே' - என்றனர்.

'ஓடட்டுமே! அவன் எங்கே ஓடினாலும் திரும்பி இங்கே தான் வரவேண்டும். ஏனென்றால், பெட்டிச்சாவி என்னிடம் தானே இருக்கு' என்றார் எஜமான். இவரது முட்டாள்தனமான பதிலைக்கேட்டுக் கூடியிருந்தவர்கள் தங்களுக்குள் சிரித்துக்கொண்டனர்.

## பொது அறிவு

1. பனைத்தீவு இந்தக் கண்டத்தில் உள்ளது?
   அமெரிக்காவுக்கு மேற்கே தென்பசுபிக் கடலில் உள்ளது.
2. ஒலிம்பிக் போட்டியில் அண்மையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பெண்களுக்கான விளையாட்டு எது?
   உதைபந்தாட்டம்
3. தமிழீழத்தின் தேசியப் பூ எது?
   காந்திக்கைப் பூ
4. ஒஸ்கார் விருது வழங்கும் விழா முதலாவதாக நடைபெற்ற ஆண்டு எது?
   1929
5. சமாதானத்தின் சின்னம் எது? அதை அமைத்தவர் யார்?
   வெண்புறா. புதுமுறை ஓவியத்தின் தந்தை என்று சிறப்பிக்கப்படுபவரான பிலோ பிக்காஸோ.

மு. நிவிதா,
தரம் 05.
மாணிக்கவாசகர் வித்தியாலயம்.

## தெரிந்து கொள்ளுங்கள்

- கீதாஞ்சலி எனும் நூலை இயற்றியவர் யார்?
- முட்டாள் பறவை என வர்ணிக்கப்படுவது எது?
- முட்டையில் இல்லாத விட்டமின் எது?
- உலகில் உள்ள மொத்த பாம்புகளின் வகைகள் எத்தனை?
- மனித உடலில் பயனற்ற உறுப்பு எது?

இரவீந்திரநாத் தாகூர்
வான்கோழி
விட்டமின் - C
2500
குடல் வாளி

மா.நாகவதனி
தரம் - 6
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை



# இன்ஸ்பெக்டர் இளையதம்பி துப்பறியும்

# தொலைந்த வைரம்





(சென்றவாரத் தொடர்ச்சி)

நாதன் போட்ட கூச்சலைக் கேட்டும். இளையதம்பியின் அதிரடி நடவடிக்கையைப் பார்த்தும் கலைவாணி நகைக் கடையின் முன்பாக திருவிழா காணவந்ததைப் போல வேடிக்கை பார்ப்போர் கூட்டம் கூடியது.

கடைக்குள்ளிருந்த முத்து வேலுவும்சத்தம் கேட்டு வெளியே ஓடிவந்தார். கூடி நின்றவர்களில் ஒருவரின் கைத் தொலைபேசியை வாங்கிய இளையதம்பி. பொலிஸ் நிலையத்துக்கு ஃபோன் செய்து தனது ஜீப்பை உடனடியாகக் கலைவாணி நகைக்கடைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டார். கடையின் முன்னால் கூடி நின்றவர்களைப் பார்த்து. எல்லாம் முடிந்து விட்டது நீங்கள் போய் அவரவர் வேலை களைக்கவனித்திடுங்கள் என்று சொல்லி. அவர்களைக் கலைந்து போகச்செய்தார்.

வேதனையோடு நாதனைப் பார்த்த முத்துவேலு- நாதன் ஏன் இப்படிச் செய்தாய் வேலையில்லாது அநாதையாக அலைந்து திரிந்த உனக்கு வேலைகொடுத்து உதவிய எனக்கு நல்ல தொரு உபகாரம்தான் நீ செய்தாய் என்று கண்கள் கலங்கச் சொன்னார். பின்னர் இளையதம்பியைப் பார்த்து இளையதம்பி இவனை மன்னித்துத் துரத்திவிடுங்கள். எங்கேயாவது போய்ப் பிழைத்துக்கொள்ளட்டும் என்று கேட்டுக் கொண்டார். சரி வாருங்கள் ஜீப் வரும்வரை கடைக்குள்ளே சென்று காத்திருக்கலாம் என்று சொல்லிய இளையதம்பி. நாதனையும் இழுத்துக் கொண்டு உள்ளே வந்தார். உள்ளே வந்தவர் நாதனைக் கூட்டிக் கொண்டு நேராகப் பட்டறைக்குள் போனார்.

பட்டறையிலிருந்த கதிரை ஒன்றில் நாதனை இருக்கச் செய்து விட்டு அவனருகே சென்ற இளையதம்பி- நாதன் மரியாதையாக இப்போதே வைரத்தை எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய் என்பதைச் சொல்லிவிடு பொலிஸ் நிலையத்துக்குப் போன பின்னர் உன்னை நிதானமாக இப்படியெல்லாம் கேட்டுக்கொண்டிருக்க மாட்டேன் நினைவிருக்கட்டும் என்று மிரட்டினார்.

### உண்மை வெளிவந்தது

இனிமேலும் செய்த தவறை மறைத்து நாடகமாடுவதில் பிரயோசனமில்லை என்பதை உணர்ந்துகொண்டான் நாதன். ஐயா வைரத்தை நான்தான் எடுத்தேன். ஆனால் அதைத் திட்டம் போட்டு நான் திருடவில்லை. காலையில் கடையின் நிலத்தைத் துடைத்துச் சுத்தம் செய்யும்போது முத்துவேலு ஐயாவின் கதிரைக்கு அடியிலே வீழ்ந்து கிடந்த வைரத்தைப் பார்த்தேன். வைரத்தை எடுத்து ஐயாவிடம் கொடுத்து விடலாம் என்றுதான் முதலில் நினைத்தேன். எனினும் அதை விற்றால் நிறையப்பணம் கிடைக்கும் என்ற பேராசையால் எடுத்து மறைத்து வைத்துக் கொண்டேன்.

பேசிக்கொண்டிருந்த நாதனை இடைமறித்த இளையதம்பி. வைரத்தை எடுத்து ஒளித்த வரலாற்றைப் பிறகு எனக்கு விளக்கமாகச் சொல்லு நாதன். இப்போது வைரம் எங்கிருக்கிறது அதை முதலில் எடுத்துக்கொடு என்று சொன்னார்.

இளையதம்பியின் அருகே நின்ற முத்துவேலு அடேய் அப்பா நாதன் வைரத்தை நீ ஒன்றும் விழுங்கிவிடவில்லையே! அநியாயமாக என்னை கடையில் உயிரைவிடும் தொலைத்துவிடாதே என்று கவலையோடு சொன்னார். மிஸ்டர் முத்துவேலு நீங்கள் எதற்கும் கவலைப்படாது சிறிது நேரம் அமைதியாய் இருங்கள் என்று சொல்லிய இளையதம்பி நாதனின் கைவிலங்கைக் கழற்றிவிட்டார்.

### குப்பைத் தொட்டியில் கிடந்த பச்சை வைரம்

விரைந்து கடைக்கு வெளியே வந்த நாதன் வாலருகே வைக்கப் பட்டிருந்த குப்பைத்தொட்டியை எடுத்து. தலைகீழாகத் திருப்பிக் கொட்டினான். தரையில் விழுந்த குப்பைகளைக் கையால் கிளறி அவற்றின் மத்தியிலே கசங்கிக்கிடந்த மிட்டாய் சுற்றிவரும் காகிதம் ஒன்றை எடுத்தான். காகிதத்தைப் பிரித்தவன் அதனுள்ளிருந்த பச்சை வைரத்தை எடுத்து. இளையதம்பியிடம் கொடுத்தான். நல்லபடியாக முன்னரே நீ இதைச் செய்திருந்தால் நேரமாவது மிச்சமாயிருக்கும் என்று சொல்லிய இளையதம்பி. அவனையும் கூட்டிக்கொண்டு மீண்டும் கடைக்குள் வந்தார்.

### முத்துவேலுவின் பெருந்தன்மை

வைரத்தை முத்துவேலுவிடம் கொடுத்தார் இளையதம்பி. இளையதம்பி வைரம்தான் கிடைத்துவிட்டதே ஏதோ தெரியாது தவறு செய்துவிட்டான் பாவம் பிழைத்துப் போகட்டும் விட்டுவிடுங்கள் என்று கேட்டுக்கொண்டார் முத்துவேலு.

நாதனைப் பார்த்த இளையதம்பி பார்த்தாயா நாதன். உனது முதலாளி எவ்வளவு பெருந்தன்மையானவர் என்பதை. இதுவே வேறு யாராக இருந்தாலும் உன்னை ஜெயிலுக்கு அனுப்பி வைத்து விட்டுத்தான் மறுவேலை பார்த்திருப்பார்கள் என்று சொன்னார். நாதன் ஓடிச் சென்று முத்து வேலுவின் கால்களில் பொத்தென்று விழுந்தான்.

ஐயா என்னை மன்னித்துவிடுங்கள். வைரத்தைத் திட்டம்போட்டு நான் திருடவில்லை. காலையில் நிலம் துடைக்கும்போது உங்களது கதிரையடியில் விழுந்து கிடந்த வைரத்தைக் கண்டேன். வைரத்தைப் பார்த்ததும் அதன்மேல் ஆசைகொண்டு விற்றுப் பணமாக்கலாம் என்ற பேராசையால்தான் பிழை செய்து விட்டேன் என்று சொல்லிக் கதறியழுதான். சரி நடந்தது போகட்டும் பிழைத்துப்போ. இனி யாவது திருந்தி நடக்கும் வழியைப்பார் என்று சொல்லிய முத்துவேலு இலாச்சியைத் திறந்து அவனது ஒருமாதச் சம்பளக் காசை எடுத்து எண்ணிக் கொடுத்தார். பின்னர். இளையதம்பியைப் பார்த்த முத்துவேலு இளையதம்பி தயவுசெய்து எனக்காக இவனை மன்னித்து விட்டு விடுங்கள் என்று கோரினார். முத்துவேலுவைப் பார்த்துச் சிரித்த இளையதம்பி. அது உங்களது இஷ்டம் மிஸ்டர் முத்துவேலு நீங்கள் புகார் எழுதிக் கொடுக்காமல் இவன் மேல் என்னாலும் நடவடிக்கை எடுக்க முடியாது என்று சொன்னார்.



(தொடரும்)

# சொற்கோபுரம்

| | | | | |
|---|---|---|---|---|
| பூ | | | | |
| பூ | னை | | | |
| பூ | ச | ணி | | |
| பூ | ஞ் | சோ | லை | |
| பூ | ங் | கா | ற் | று |

மேற்காட்டப்பட்ட சொற்கோபுரம் மாதிரி உங்களுக்கு விரும்பிய எழுத்தைப் பயன்படுத்தி வேறு சொற்கோபுரங்களை அமையுங்கள்.





சதுரத்தில் வெட்டப்பட்ட பகுதியில் பொருந்தக்கூடிய சரியான துண்டு எது?

# விடுகதைகளும் விடைகளும்

1. அக்காள் விதைத்த முத்து. அள்ள முடியாத முத்து - அது என்ன?
2. ஆட்டி விட்டால் ஆடும். அந்தரத்தில் தொங்கும் - அது என்ன?
3. இணைபிரிய மாட்டார்கள். நண்பர்கள் அல்ல. ஒன்றுசேரமாட்டார்கள். பகைவர்கள் அல்ல - அவை என்ன?
4. ஈக்கி ஈக்கி நெடும் ஈக்கி - அது என்ன?
5. உயிர் இல்லாத நீதிபதி. ஒழுங்காக நியாயம் சொல்கிறார் - அவர் யார்?

விடைகள்

1. கோலம் 2. ஊஞ்சல் 3. தண்டவாளம் 4. மழை 5. தராசு

# மூளைக்கு வேலை

1. சில நண்பர்களிடையே, ஆளுக்கு 2 பொம்மைகள் வீதம் கொடுத்தால், 5 பொம்மைகள் மீதமிருக்கும். ஆளுக்கு 3 பொம்மைகள் வீதம் கொடுத்தால், 5 பொம்மைகள் தேவைப்படும். நண்பர்கள் எத்தனை பேர்? பொம்மைகள் எத்தனை?

2. ஒரு சிறு கூண்டு. அதன் ஒவ்வொரு முனையிலும் ஒரு கரடிக்குட்டி உட்கார்ந்திருக்கிறது. ஒவ்வொரு கரடிக்குட்டிக்கும் எதிராக மூன்று கரடிக்குட்டிகள் உள்ளன. அதாவது ஒவ்வொரு கரடிக்குட்டியின் முன்னாலும், பின்னாலும் இன்னொரு கரடிக் குட்டி அமர்ந்திருக்கிறது. அப்படியென்றால் மொத்தம் எத்தனை கரடிக்குட்டிகள். அந்தக் கூண்டில் அமர்ந்து இருக்கின்றன?



## மூளைக்கு வேலை சென்றவார விடைகள்

1.

| | தலை | கால்கள் |
|---|---|---|
| ஆடுகள் | 16 | 64 |
| கோழிகள் | 64 | 128 |
| | 80 | 192 |

2.



இங்கே மடிக்கவும்

ஒரே மாதிரியான இரண்டு குதிரைகளுக்கு வர்ணந்தீட்டுங்கள்



# கன்று தனது தாய்ப்பசுவை சென்றடைய வழிகாட்டுங்கள்



# நாட்டியம் ஆடிய ஒட்டகம்

காட்டில் விலங்குகள் அனைத்தும் கூடின. யானை எழுந்து விலங்குகளே! நாம் அனைவரும் மகிழ்ச்சியாக காலத்தைக் கழிக்க இங்கே கூடியுள்ளோம். ஒவ்வொருவராக உங்கள் கலைத் திறமையைக் காட்டுங்கள் என்றது.



குரங்கு ஒன்று விலங்குகளின் முன் வந்து நின்றது. சுழன்று சுழன்று நாட்டியம் ஆடியது. குத்துக்கரணங்கள் போட்டது. கிளைக்குக் கிளை தாவி தனக்குத் தெரிந்த வித்தைகளை யெல்லாம் செய்து காட்டியது.



விலங்குகள் எல்லாம் கைதட்டி ஆரவாரம் செய்தன. ஒருவழியாக குரங்கின் ஆட்டம் முடிந்தது.

அதன் பின்னர் அங்கிருந்த ஒட்டகம் ஒன்று தானும் குரங்கைப் போலவே நாட்டியம் ஆடியது. அதனைப் பார்த்த விலங்குகள் ஓவென்று கூச்சல் எழுப்பின. குரங்கைப் போலவே குத்துக்கரணம் போட முயன்றது ஒட்டகம்.

அப்போது வயதான மான் எழுந்து 'ஒட்டகமே உனக்கு எது முடியுமோ அதனைச் செய். அதுதான் ரசிக்கக்கூடியதாக இருக்கும்' என்றது. ஒட்டகம் வெட்கத்துடன் போய் அமர்ந்து கொண்டது.

# கிறிஸ்மஸ் கொண்டாட்டம்

"கர்த்தர் எந்தன் மேய்ப்பர் எனக்கொன்றும் குறையில்லை..." என்ற பாடல் ஓசையைக் கேட்டதும் லக்கி குருவியும், பிரெளனி குரங்கும் திரும்பிப் பார்த்தன.

ஸ்வெட்டர் மப்ளருடன் ஜானி முயல் உள்ளே நுழைந்து கொண்டிருந்தது.

"இந்தக் குளிரிலும் உனக்கு நன்றாகப் பாட வருகிறதே! இந்தச் சூடான தேநீரைக் குடி" என்றது லக்கி.

"கிறிஸ்மஸ் நெருங்கிக் கொண்டிருக்கிறதே அது தான் பாட்டும் பாடு, பயிற்சி செய்கிறேன். பிரெளனி இந்தக் கிறிஸ்மஸ்சை எப்படிக் கொண்டாடப் போகிறோம்" என்று கேட்டது ஜானி. "நாங்கள் மூன்று பேரும் சம்பாதித்து சேர்த்து வைத்த பணத்தில் ஆளுக்கொரு புது உடுப்பு வாங்கலாம். மீதிப் பணத்தில் ஐந்து பேருக்கு ஸ்வெட்டர் கம்பளி வாங்கிக் கொடுக்கலாம்" என்று தன் திட்டத்தை அறிவித்தது பிரெளனி.

"கிறிஸ்மஸ் அன்று காலை நண்பர்களை அழைத்து, பிரேயர் வைத்து விட்டு, இனிப்புப் பண்டங்கள் வாங்கிக் கொடுக்கலாம்" என்றது லக்கி

அப்போது சோம்பேறி எலி ஜோன் உள்ளே வந்தது.

"லக்கி எனக்கும் கொஞ்சம் தேநீர் கொடு, நானும் உங்கள் கதையில் கலந்து கொள்கின்றேன்" என்றது.

"தேநீர் வேண்டுமானால் குடி. நாங்கள் கதைத்து முடித்து விட்டோம்" என்று தேநீரை நீட்டியது லக்கி.

"என்ன கதைத்தீர்கள் புதிதாக யோசிக்கவே மாட்டீர்களா? இந்தக் கிறிஸ்மஸ்சிற்கு புரியாணி செய்தால் என்ன" என்றது ஜேன்.

லக்கி, பிரெளனி, ஜானி மூன்றும் ஒன்றை ஒன்று பார்த்துக் கொண்டன.

"என்ன யோசிக்கிறீர்கள் நாங்கள் நாலுபேரும் ஆளுக்கொருவேலையைச் செய்வோம். புரியாணியை செய்து நான்கு பங்காக்கி எடுத்துக் கொள்வோம்" என்றது ஜான்.

"சரி ஏதே உருப்படியான யோசனை சொல்லியிருக்கிறாய் யார் யாருக்கு என்ன வேலை" என்றது லக்கி.

"பிரெளனி நீ அரிசி கொண்டு வா, லக்கி நெய் கொண்டு வா, ஜானி காய்கறிகள் கொண்டு வர வேண்டும். நீ என்ன செய்யப் போகிறாய்" ஜோன் "அவசரப்படாதே தண்ணீரும் விறகும் என் பெறுப்பு சரியா".

ஓ. சரி குட் நைட்.

***

கிறிஸ்மஸ் அன்று அதிகாலையில் அனைவரும் குளித்துப் புத்தாடை அணிந்து கொண்டனர்.

லக்கி, பிரெளனி, ஜானி நண்பர்கள் உறவினர்களுடன் பிறேயரை முடித்துக் கொண்டு எல்லோருக்கும் இனிப்புக்கள் வழங்கின.

லக்கி அரிசியுடன் காத்திருந்தது. பிரெளனி நெய்யும், ஜானி கரட், கோவா, லீசு்டன் வந்து சேர்ந்தன.

"நேரம் போகுது; எங்கே இந்தச் சோம்பேறி ஜோன் விறகும், தண்ணீரும் இருந்தால் தானே சமைக்க முடியும்."

சிறிது நேரத்தில் வந்த ஜோன், "நண்பர்களே என்னை மன்னியுங்கள். முழங்கால் வலி, அதுதான் சொன்ன சொல்லைக் காப்பாற்ற முடியவில்லை"

"பிரெளனி நீ இந்தப் பொருட்களுக்கு. காவல் இரு நான் தண்ணீர் கொண்டு வருகிறேன். ஜானி விறகு கொண்டு வா" என்று புறப்பட்டது லக்கி.



சிறிது நேரத்தில் புரியாணி செய்யும் வேலை தொடங்கியது. மூன்றும் கதைத்துக் கொண்டே வேலை செய்தன.

"லக்கி மிகவும் நன்றாகப் புரியாணி செய்திருக்கிறாய். சுப்பர்."

"வீட்டில் உறவினர்கள் காத்துக் கொண்டு இருப்பார்கள். அவரவர் பங்கை எடுத்துச் சென்று கிறிஸ்மஸ் விருந்து கொடுக்கலாம்" என்றது லக்கி சந்தோசத்துடன்.

மூன்று பாத்திரங்கள் வந்து சேர்ந்தன.

"பிரெளனி நாலு பங்காக வை" என்றது ஜோன்.

"சரி அரிசி கொண்டு வந்த லக்கிக்கு ஒரு பங்கு. காய்கறி கொண்டு வந்த ஜானிக்க ஒரு பங்கு. நெய் கொண்டு வந்த எனக்கு ஒரு பங்கு. மீதி ஒரு பங்கில் எனக்கும்போது பிரெளனி" என்றது ஜான்

"தண்ணீரும் விறகும் யார் கொண்டுவந்தது" என்று கேட்டது ஜானி.

"நீங்கள் தான்" என்றது ஜோன். "அப்படி யென்றால் இதை மூன்று பங்காகப் பிரிப்பது தானே நியாயம்" என்றன பிரெளனி, லக்கி, ஜானி.

"நான் தான் ஐடியா கொடுத்தேன்" என்றது ஜோன்

"இவ்வளவு நேரம் வாசனை பிடித்ததே ஐடியாவிற்குச் சரியாகப் போய் விட்டது. எந்த வேலையையும் செய்யாமல், சாப்பிட வேண்டும் என்று நினைக்காதே ஜோன். அவரவர் உழைப்பில் சாப்பிடும் கூழ் அமிர்தத்திலும் மேலானதென்று கர்த்தரே சொல்லியிருக்கிறார் என்று தெரியுமா?" என்றது லக்கி .



"என்னை மன்னித்துக் கொள் லக்கி நான் வாறேன்."

"நீ சோம்பேறியாக இருந்தாலும் எங்கள் நண்பன் தான் இந்தப் பங்கை எடுத்துக் கொண்டு போ" என்றன மூன்றும் ஒரே குரலில்.

கிறிஸ்மஸ் தினத்திலிருந்து ஜோன் புதுப்பிறவி எடுத்தது.





# அண்ணாவும் தங்கையும்

## பச்சை விறகு எரிவதில்லை ஆனால் காய்ந்த விறகு எரிவதேன்?



அம்மா சமையலறையில் சமைத் துக் கொண்டிருந்தார். அடுப்பில் உலை கொதித்துக் கொண்டிருந் தது. குழலிக்கு பாடசாலை விடு முறையான படியால், அம்மாவுக் குச் சிறு சிறு உதவிகள் செய்து கொண்டிருந் தாள்.

சிறிது நேரத்தில் அடுப்பி லிருந்து புகை வந்தது. அடுப்பைப் பார்த்தார் அம்மா. விறகு எரிந்து முடியும் தறுவாயில் இருந்தது.

**அம்மா:** குழலி! அடுப்பு நூரப் போகுது. இரண்டு விறகுக்கட்டை எடுத்து அடுப்புக்குள்ளவை.

பின் விறாந்தையில் இருந்த இரண்டு விறகுகளை எடுத்து வந்து, அடுப்பிற்குள் வைத்தாள் குழலி. விறகுகள் பச்சையாக இருந்தன. மழையென்ற படியால் அம்மா விறகுகளைக் காய வைக்கவில்லை என்று நினைத்துக் கொண்டு, அவற்றை அடுப்பிற்குள் வைத்தாள். ஆனால் அவை எரிவதற்கு கஷ்டப்பட்டன. ஊ...ஊ... என்று ஊதிப் பார்த்தாள். எரியவில்லை. ஆனால் அடுப்பிலிருந்து வந்த புகை குழலியுடைய கண்களில் கண்ணீரை வரவழைத்தது. கண்களைக் கசக்கிக் கொண்டாள்.

**குழலி:** அம்மா விறகு எரியுதில்லை.

**அம்மா:** நீ இங்கால வா. நான் எரிக்கிறன்.

(குழலியைத் தேடிக் கொண்டு சமையலறைக்குள் சங்கர் வந்தார்)

**சங்கர்:** என்ன குழலி? ஏன் கண்ணக் கசக்கிறாய்?

**குழலி:** புகை கண்ணுக்க போய் விட்டுதண்ணா.

**சங்கர்:** விறகு பச்சையா இருக்கு. அதுதான் எரியாமல் புகை வருகிறது.

**குழலி:** பச்சை விறகு எரியமாட்டுதா அண்ணா?

**சங்கர்:** இல்லை குழலி. தாவர செல்களிலுள்ள பகுதிகளில் 90 சதவீதம் நீர் உள்ளது. இதனால் பச்சையான தாவரப் பகுதிகள் விரைவில் எரிவதில்லை. செல்களிலுள்ள நீர் குறையக் குறைய தாவரப் பகுதிகள் காயத் தொடங்குகிறது. நீரில்லாத செல் பகுதிகள் விரைவில் எரியக் கூடியவையாக மாறுகிறது. அதனால்தான் வீடுகளில் பச்சைத் தடிகளை வெட்டி வெய்யிலில் காய வைக்கிறார்கள்.

**குழலி:** வெயிலில் நன்றாகக் காய்ந்த பின்னர் எடுத்து அடுப்புப் பற்ற உபயோகிக்கிறார்கள்.

**சங்கர்:** சரியாகச் சொன்னாய் குழலி

**குழலி:** ஆனால் அண்ணா எனக்கொரு சந்தேகம்?

**சங்கர்:** என்ன சந்தேகம் குழலி . கேள் சொல்லுறன். அவுஸ்ரேலியாவில் சில மாதங்களுக்கு முன்னர்

**குழலி:** பெரும் காட்டுத்தீ பரவியதாக கேள்விப்பட்டனான். காட்டில் பச்சை மரங்கள் நிறைய இருக்கும். பெரிய மரங்களும் இருக்கும். பச்சையான தாவரப்பகுதிகள் விரைவில் எரிவதில்லை என்று சொன்னீர்கள்? ஆனால் அவை எப்படி எரிந்தன.?



**சங்கர் :** அதிகமான வெப்பத்தாலேயே பச்சையான தாவரப்பகுதிகளும் எரிந்து போகிறது. அதனால் தான் காட்டுத் தீயில் பச்சையான பெரு மரங்கள் கூட எரிகட்டையாக மாறி, காட்டுத் தீ பரவ உதவுகின்றன.

**அம்மா:** சரி இனி அண்ணாவும் தங்கையும் கதைய நிப்பாட்டிப்போட்டு சாப்பிட வாங்கோ. சமையல் முடிஞ்சுது.

# நாம் வாழும் உலகம்

மனிதனுடைய கண்கள் மிகவும் சுலபமாக ஏமாற்றப்படக் கூடியவை. ஆனால், புகைப்படக் கருவியால் எடுக்கப்படும் படங்கள் நிரந்தரமாகப் பதியப்படக் கூடியவை. அவற்றை ஆய்வு கூடத்திலிருந்து ஆறுதலாகப் பலர் சேர்ந்து பரிசீலனை செய்யலாம்.

தற்கால வானிலை ஆராய்ச்சிகள் யாவும். அநேகமாகப் புகைப்படக் கருவிகள் மூலமே நடத்தப்படுகின்றன. மேலும் சூரியனைப் பற்றிய ஆராய்ச்சிகளும், சூரிய கிரகணங்களின் போது நடத்தப்படும் பரிசோதனைகளும் தொலைநோக்கி மூலம் வெறும் கண்களால் பார்த்தால், கண் பார்வை கெட்டுவிடும் என்பதால், புகைப்படங்கள் மூலமே ஆய்வு செய் யப்படுகிறது.

இந்த நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட ரேடியோத் தொலைநோக்கிகளின் உதவியால் விண்ணியல் மேலும் முன்னேறியிருக்கிறது. தற்காலத்தில் விண்ணிற் செலுத்தப்படும் செயற்கைக் கிரகங்களைக் கண்டுபிடிப்பதற்கும், இவை மிகவும் பயன்படுகின்றன. எல்லாவற்றுக்கும் சிகரமாகக் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் ரஷ்யா, அமெரிக்கா ஆகிய வல்லரசுகள் மனிதர்களைக் கொண்டும், மனிதர் இல்லாமலும் விண்வெளிக்கு செயற்கைக் கிரகங்கள் ரொக்கட்டுக்களை அனுப்பின. இவை பல மைல்களுக்கு அப்பால் சென்று, பூமியைப் பலமுறை வலம் வந்து பின் பூமியிலிறங்கியதும் சந்திரனுக்குச் சென்று அதன் தரையில் இறங்கி ஆராய்ச்சிகள் செய்து பின் மீண்டும் பூமியை வந்தடைந்தன.

மேலும் சுக்கிரன், செவ்வாய், வியாழன், சனி போன்ற கிரகங்களுக்கு அண்மையில் சென்று அங்குள்ள நிலைமையை ஆராய்ந்தறிந்தும் அரும் பெருஞ் சாதனைகளாகும்.



# தவறிய வால்களைக் கண்டு பிடியுங்கள்

காட்டில் விலங்குகள் சோகமாக அமர்ந்திருந்தன. அதற்குக் காரணம், அவற்றின் வால்களைக் காணவில்லை. உரிய வால்களைக் கண்டுபிடிக்க உதவுங்கள்.



நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்*
*மாறாநீர் வையக்கு அணி.*

திருக்குறள்

## நமது நோக்கு

# போர்ப் பீதி தணியுமா?

உலகின் அமைதிக்காக பெத்லஹேமில் யேசுபிரான் அவதரித்த தினம் இன்று. கிறிஸ்மஸ் தினத்தை உலகெங்கும் வாழும் மக்கள் மகிழ்ச்சியோடு கொண்டாடுகிறார்கள்.

ஆனால், கடந்த பல தசாப்தங்களாக போரின் வடுக்களையும், இன அடக்குமுறைகளையும் சுமந்து சுமந்து வாழ்ந்த ஈழத்தமிழ் மக்களுக்கு இன்றைய நாள்கூட மகிழ்ச்சியளிப்பதாக அமையவில்லை.

இடம்பெயர்ந்த மக்களின் அவல வாழ்வும், அடிப்படை வசதியற்ற மக்களின் துன்பங்களும் தமது அன்றாட – அத்தியாவசிய பிரச்சினைகளுக்குகூடத் தீர்வுகாணப்படாத ஒரு சூழலுக்குள்தான் ஈழத்தமிழ் மக்கள் இன்றைய கிறிஸ்மஸ் தினத்தைக் கொண்டாட நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றனர்.

வடக்கு – கிழக்கு தமிழ் மக்கள் போரால் பட்ட அவலங்களுக்கும், எதிர்கொண்ட இழப்புக்களுக்கும் அவசரமாகத் தீர்வு காணப்படவேண்டியுள்ளது. இதைச் சுட்டிக்காட்டி இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை வழங்குமாறு– புலிகள் கையளித்த யோசனைகளை அரசாங்கம் கருத்தில் எடுக்காமல் தட்டிக்கழித்து வருகிறது.

இறுதித்தீர்வு பற்றியே பேசப்போவதாக ஆரம்பித்த ஜனாதிபதி சந்திரிகா – இப்போது இடைக்கால நிர்வாகம் மற்றும் இறுதித்தீர்வு ஆகியன குறித்து ஒரேநேரத்தில்தான் பேசமுடியும் என்று அறிவித்திருக்கின்றார்.

புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைகளைத் தட்டிக் கழித்து போர் முனைப்பில் அரசாங்கம் தீவிரம்காட்டி நிற்கின்ற சூழலில்தான் இந்தவருட கிறிஸ்மஸ் தினம் கொண்டாடப்படுகிறது.

மாவீரர்தின உரை மூலம் அரசாங்கத்துக்கு புலிகள் விடுத்த அவசர அழைப்புக்கு அரசாங்கத் தரப்பில் இருந்து உரிய பதில் கொடுக்கப்படாததால் போர் மூளுமோ என்ற அச்சம் எங்கும் பரவியுள்ளது.

இந்தச் சூழலில் ஈழத்தமிழ் மக்களால் எந்தவொரு எதிர்பார்ப்பும் இல்லாத வெறுமைநிலைக்குள் நின்றவாறே இந்த நன்நாளைக்கொண்டாடவேண்டியுள்ளது.

உலக அமைதிக்காக யேசுபிரான் அவதரித்த கிறிஸ்மஸ் தினத்தில் – 2000 ஆம் ஆண்டு புலிகள் ஒருதலைப் பட்சமான போர்நிறுத்தத்தை அறிவித்து தமது சமாதான வழிமுறை மூலமான நல்லெண்ணத்தை வெளிப்படுத்தினர்.

தொடர்ந்து நான்கு மாதங்கள் இந்த யுத்த நிறுத்தத்தை அவர்கள் நீடித்தபோதும் அதற்கு அரசாங்கம் இராணுவ மொழியிலேயே விடைகொடுத்தது.

இராணுவத்தை தயார்படுத்திக்கொண்டு யுத்த நிறுத்தம் முடிவுற்ற கையோடு புலிகள் மீது தாக்குதலைத் தொடுத்து பேரழிவையும் சந்தித்தது.

இதன் பின்னர் 2001 டிசம்பரில் கிறிஸ்மஸ் தினத்துடன் மீண்டும் புத்துயிர்பெற்ற சமாதான நடவடிக்கைகள் 2002 பெப்ரவரியில் யுத்தநிறுத்தத்துக்கு வழிவகுத்தது.

இந்த யுத்தநிறுத்தம் முப்பத்தைந்து மாதத்துக்கு மேலாக நீடித்துவருகிறது. ஆனால் , இந்தக் காலப்பகுதியில் ஆறு சுற்றுப்பேச்சுக்கள் நடத்தப்பட்டபோதும் – தமிழ் மக்களுக்கென எதுவும் கிடைத்துவிடவில்லை.

பின்னர் இடைக்கால நிர்வாக யோசனைகள் கையளிக்கப்பட்டும், அதை அரசாங்கம் தட்டிக்கழித்து வருகின்ற சூழலில் மீண்டும் போர் பற்றிய பீதி தொற்றிக்கொண்டிருக்கிறது.

இந்த போர்ப்பீதியைத் தணிக்கக்கூடிய ஒரேவழி இடைக்கால நிர்வாகயோசனை அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதுதான்.

இடைக்கால நிர்வாகயோசனையின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்க அரசாங்கம் முன்வரவேண்டும். அத்துடன், அரசாங்கமும் – எதிர்க்கட்சியும் அரசியல் இலாபங்களையும் வரட்டுக்கௌரவத்தையும் கைவிட்டு நாட்டு மக்களின் நலன்கருதி செயற்படவேண்டும் என யாழ். ஆயர் விடுத்திருக்கும் கிறிஸ்மஸ்தினச் செய்தி இங்கு முக்கியத்துவம் வாய்ந்தது.

அரசாங்கத்தின் கைகளில்தான் யுத்தமோ, சமாதானமோ என்ற ஒரு நிலைதோன்றியிருக்கும் சூழலில் இன்றைய கிறிஸ்மஸ் தினத்தில் அது குறித்த நம்பிக்கையை மக்களிடத்தில் ஏற்படுத்தவேண்டிய நிலையில் அரசாங்கம் இருக்கிறது.

அதேவேளை, யுத்தத்தின் மூலம்தான் தீர்வு என்ற நிலைப்பாட்டை மீண்டும் அரசுகொடுக்கமுயன்றால் அதன் விளைவுகளும் விபரீதமாகவே அமையும்.

## நாடும் நடப்பும்




## ஊர்சுற்றியார் பார்வையில்...

# சாதனைகளில் எங்கள் பொடியள் குறைந்தவர்களா ?

குப்பைகளிலிருந்து மேல் நாடுகளில் மின்சாரம் தயாரிப்பது சம்பந்தமாக நண்பரும் நீரும் பேச்செடுத்துவிட்டுப் போய்விட்டீர்கள். குப்பைகளைப் பிரயோசனப்படுத்துவதுபற்றி ஏதோ சொல்லப் புறப்பட்டீர்களே அதைப் பற்றிக் கொஞ்சம் சொன்னால் என்ன?

இப்படி நேற்றுக்காலை நான் அலுவலகம் வந்ததும், சிலா தொலைபேசியில் கேட்டார்கள். வரும்வழியில் எனது மற்றொரு பழைய நண்பரும் இப்படிக் கேட்டார்.

நண்பரும், நானும் அன்று பேசிக்கொண்டு செல்கையில் - மேல் நாடுகளில் குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிப்பதாகவும், இங்கு நமது நாட்டில் குப்பைகள் எக்கச்சக்கமாக எங்கே பார்த்தாலும் குவிந்து கிடக்கையில் அதை ஏன் மின்சாரம் உருவாக்கப் பயன்படுத்தக்கூடாது என்று கேட்டார்.

உண்மைதான, இங்கே குப்பை அதிகமாகத்தானிருக்கிறது. ஆனால், மேல் நாடுகளிலும் நம் நாட்டில் காணப்படும் குப்பைகளுக்கும் வேறுபாடுகள் நிறையவே இருக்கின்றன.

நம் வீட்டுத் தோட்டங்களில் இடைப் பழம் ஒன்று பழுத்துவிட்டால் போதும், வாழைக்குலையைப் பவித்திரமாக வெட்டி வீட்டுக்குள் கட்டிலுக்குக் கீழேயோ, பரணுக்குக் கீழேயோ கொண்டு போய்வைத்து விட்டு, காற்றுக்குக் கிழிந்து போகாத இலைகளையும் பக்குவமாக வெட்டி அடுக்கி வைத்துவிட்டு, குலை கொடுத்த வாழையை இரண்டு மூன்று துண்டங்களாக வெட்டிவாசலுக்குப் பக்கத்தில் கொண்டு போய்க் குவித்து விடுவார்கள்.

பப்பாளிமரங்கள் வளரும்வரை பொறுத்திருந்து அது ஓய்வில்லாமல் கொடிகொடியாய் பூத்துத்தள்ளிக் கொண்டிருந்தால், இந்தப் பப்பாளி காய்க்காது என்று இரண்டு மூன்று துண்டங்களாகத் தறித்து அதையும் வாசலுக்கு அருகே கொண்டு போய் குவித்துவிடுவார்கள்.

மழைவிழுந்ததும் அழகுக்காக வாசலிலும், உள்ளேயும், வீட்டுக் கூரையுடனும், சுவருடனும் ஒட்டிப்படரவிட்ட கொடிகளையும் நறுக்கி, வளையம் வளையமாகக் கொடிகளை வாசலில், வீதிகளில் போட்டுவிடுவார்கள். குரோட்டன்கள் மற்றும் மரம் செடிகளும் வாசலில் வீதிக்கு வந்து குவியும்.

இந்த மரங்களையெல்லாம் பிளாஸ்ரிக் குப்பைத் தொட்டிகளுக்குள்ளே போட முடியுமா?

மேல் நாடுகளில் காற்றுக்கும், மழைக்கும் மரங்கள் முறிந்து விழாதபடி இரும்புக் குழாய்கள், கம்பிகள் போட்டு மரங்கள பாதுகாப்பாக வளர்க்கப்படுகின்றன. வீதியோரங்களிலும், பூங்காக்களிலும் மரம் வளர்ப்பு மிகக் கவனமாகவும், பாதுகாப்பாகவும் வளர்க்கப்படுகின்றன.

ஜேர்மனியிலும், பிரான்சிலும், லண்டனிலும் மற்றும் பெல்ஜியம், நெதர்லாந்து என ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றிலுமே காடுவளர்ப்பு - செயற்கைக் காடுகள் - மிக அக்கறையுடன் ஆர்வத்துடன் மேற்கொள்ளப்படுகின்றன.

வீதியோரங்களில் மரங்கள் பெயர்ந்துவிடாமல், இரும்புத் தடுப்புக்கள் மரத்தின் அடிப்பாகத்திலும், மரங்கள் சரிந்து விழாமல் அடியிலிருந்து கொப்புகள்பிரியும் இடம்வரை இரும்புச் சட்டங்களும் பூட்டி, மிகக் கவனமாகப் பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்படுகின்றன.

நம் நாட்டில் வீதியோரத்தில் ஒரு சிறு செடி நட்டிருந்தாலும் ஆடு, மாடுகள் அதை கடித்து நாசமாக்கிவிடும். அப்படி ஆடுமாடுகளுக்குத் தப்பினாலும், வீதிகளில்போவோர் பலருக்கும் கைகால்கள் சுத்தமாக இருக்கமாட்டா. இலையையும், தண்டையும் இழுத்துப்பிய்த்து நோண்டிச் சிதைத்தால்தான் அவர்களுக்கு திருப்தி.

ஐரோப்பிய நாடுகளில் குளிர்காலம் தொடங்குவதற்கு முதற்படியாக ஒக்ரோபர், நவம்பரில் இலையுதிர்காலம் தொடங்கிவிடும். மரங்களிலுள்ள இலைகள் பழுத்து விழத்தொடங்கும். இவை வீதியோரங்களில் சருகாக நிறைந்து கிடக்கும். உள்ளூராட்சி சபையின் துப்புரவுத் தொழிலாளர்கள் இந்தக் குப்பைகளை அவற்றுக்குரிய வாகனங்களில் எடுத்துச் செல்வர்.

இந்தச் சருகு போன்ற குப்பைகள் மின்சாரம் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றனவோ தெரியாது. ஆனால், இந்தச் சருகுக் குப்பைகள் வீதிகளுக்கு ஊற்றி, மெருகு பண்ணப்படும் தார் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுவதாக ஒரு நண்பர் சொன்னார். மேல்நாட்டில் எதையுமே மீண்டும் மீண்டும் புதுப்பித்துப் பயன்படுத்திவருகிறார்கள். என்றும் என் நண்பர் சொன்னார்.

நாங்கள் குடிக்கிற தண்நீருக்கும், குளிக்கிற தண்ணீருக்கும், கழுவித்தள்ளுற தண்நீருக்கும் பணம் செலுத்திக் கொண்டிருக்கிறோம் என்று சொன்ன நண்பர், நாங்கள் குளித்து, கழுவிப்பாவித்துச் செல்லும் தண்ணீர் யாவும் சுத்தப்படுத்தி, வடிகட்டி மீண்டும் எங்கள் பாவனைக்கே எங்களுக்குத் திரும்பி வருகிறது. இது பொதுவாக ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலுமுள்ள, பல நகரங்களிலுள்ள நடைமுறை என்று மேலும் சொனனார்.

குப்பைகளிலிருந்து சில நாடுகளில் மின்சாரம் தயாரிக்கிறார்கள். வேறு பல உபயோகமான பொருட்கள், கால் நடைகளுக்குத் தீவனமும், அதேசமயம் பயிர்களுக்கு உரமும் இவற்றிலிருந்து சில நாடுகளில் உற்பத்தி செய்யப்படுகிறது.

ஐரோப்பிய நாடுகளில் இவ்வளவுக்குக் கழிவுப் பொருட்கள் பயன்பெறுகின்றனவென்றால் ஜப்பான், சீனா போன்ற முன்னேற்றமடைந்துள்ள ஆசிய நாடுகளில் எப்படியெல்லாம் நாம் பாவிக்கும் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன வென்பதையும் ஆராய்ந்தால் நமக்கும் பயன்கிடைக்கலாம்.

இப்படி நான் வீட்டில் ஒரு சமயம் சொன்னேன். எங்களைக் குறைத்து மதிப்பிடாதையுங்கோ. நாங்களும் கழிவிலிருந்து எத்தனை பயன்பெறுகிறோம் என்று உங்களுக்குத் தெரியாதா? தமிழ் நாட்டுக்கு நீங்கள் போயிருந்தபோது அழகான சுவர்களிலும் வட்டம், வட்டமாக ரொட்டிபோல் சுவர்களில் கோலம் போடுவதுபோல ஒட்டப்பட்டிருந்தவைகளைப் பார்க்க வில்லையா? என்று சக தர்மினி முன்பு ஒருதடவை கேட்டது நினைவுக்கு வந்தது.

ஆமாம். மாட்டுச் சாணத்துடன் சிறிது உமியையும் கலந்து, குழைத்து வட்டமாகத் தட்டிச் சுவர்களில் ஒட்டிக் காயவைத்து எடுத்தால் அது விறாட்டியாகிவிடும்.

இவை அடுப்பெரிப்பதற்குப் பயன்படும். விறாட்டி சுட்டெரிக்கப்பட்ட சாம்பல் திருநீறாகவும், பல்துலக்கும் பற்பொடியாகவும் கூடப் பயன்படுத்தப்படும். வானொலியில்கூடப் பெரிதாக விளம்பரப்படுத்தப்படும் பற்பொடிக்கு மூலப்பொருளே இந்த விறாட்டி தானே என்று சொன்னதை எப்படி மறப்பது.தமிழ் நாட்டில் பிணங்கள் எரிப்பதிலும் இந்த விறாட்டிகளுக்கு முக்கிய இடமுண்டு என்று அவர் சொன்னதும் தவறில்லை.

பத்து மாடுகள் வளர்ப்பவர்கள் சாணம் முதலிய மாட்டுக் கழிவுகளிலிருந்தும், மின்சாரம் உற்பத்திசெய்து தங்கள் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளலாம். இந்த வாயு மின்சாரம் நம் நாட்டில் சில மாட்டுப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டுப் பயன்படுத்தப்படுகிறது.

ஐரோப்பிய நாடுகள் மட்டுமே எல்லாவற்றிலும் திறமைசாலிகள் என்று சொல்லிவிடமுடியாது. எங்களிடமும் திறமைசாலிகள் பலர் இருக்கின்றனர். இவர்களைப் பயன்படுத்துவதில்தான் நாங்கள் பெறும் பயன் தங்கியிருக்கிறது.

நாங்கள் முயற்சி செய்தால் மேலும் பல ஆராய்ச்சிகளில் மின்சாரம் மட்டுமல்ல, வேறு பலவற்றையும் உற்பத்திசெய்ய முடியும். இலங்கை அரசு வளர்ச்சிபெற்ற பல நாடுகளிலிருந்து போர்த் தளபாடங்களையும், போர்ச் சாதனங்களையும், ஆயுதங்களையும் இறக்குமதி செய்து போருக்குப் பயன்படுத்தியது. இது மட்டுமல்ல போர்த்தந்திரங்கள், வியூகங்களைப் பெறுவதற்கு அந்த நாடுகளிடமிருந்தும், பெரிய வல்லரசுகளிடமிருந்தும் ஆலோசனைகளைப் பெற்றது.

இந்தியாவும் ஆசியப் பிராந்தியத்தில் ஒரு வல்லரசுதான். போர்த்தந்திரங்களிலும், வியூகங்களிலும் அது வேறெந்த வல்லரசுகளுக்கும் குறைந்ததுமல்ல.

1971 ஆம் ஆண்டில் இந்தியாவுக்கும் - பாகிஸ்தானுக்கும் இடையில் நடந்த ஒரு போரின்போது பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வழங்கியிருந்த உறுதிமிக்க கவச வாகனங்களான "டாங்கிகளை" இந்தியா நொறுக்கித் தள்ளிவிட்டது. நொறுக்கியது மட்டுமல்ல சேதமடைந்த டாங்கிகள் பலவற்றையும் இந்தியப்படைகள் தம்முடன் எடுத்துச் சென்று டில்லியில் காட்சிக்கு வைத்தன.

இந்த டாங்கிகளை டில்லியில் காட்சிக்கு வைக்க வேண்டாமென்று அமெரிக்கா கெஞ்சியும் இந்தியா கேட்கவில்லை. காட்சிக்கு வைத்தது.

இலங்கையில் வடக்கிலும் - கிழக்கிலும் இந்திய இராணுவம் அமைதிப்படையாக வந்திருந்தபோது விடுதலைப்புலிகளுக்கும், இந்தியப் படைகளுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. சங்கானையில் இந்திய இராணுவத்தின் பெரிய டாங்கி ஒன்று சந்தியில் தாக்குதலுக்குள்ளாகிப் புரண்டு மல்லாந்து கிடந்தது.

இந்த டாங்கியை இங்கே விட்டுவைக்காமல் இந்தியப் படை இந்தியாவுக்குக் கொண்டுசென்றுவிட்டது. இல்லையென்றால் அமெரிக்க டாங்கிகளைக் கண்காட்சிக்கு வைத்த இந்தியாவைப் பின்பற்றி இப்போது முகமாலைக்கருகில் போரில் பிடிக்கப்பட்ட ஒரு பெரிய டாங்கி - காட்சிக்குப் புலிகள் வைத்திருப்பதுபோல் அதுவுமல்லவா வைக்கப்பட்டிருக்கும்.

புதிய போர்ச்சாதனங்களையும், ஆயுதங்களையும் எதிரியிடமிருந்து மீட்பதில் மட்டுமல்ல, புதிய கண்டுபிடிப்புக்கள் மூலம் புதியவற்றையும் நம்மவர்கள் தயாரித்தும், சாதனைசெய்தும் காட்டியிருக்கிறார்கள். சாதனையில் எங்கள் பொடியள் குறைந்தவர்களா?

# ஆயரின் 2004ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் தினச் செய்தி

2004 ஆம் ஆண்டு கிறிஸ்து பிறப்பு விழாக்காலத்தில் எமது வாழ்த்துக்களையும், ஆசீரையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம். ஆண்டவர் இயேசுவின் பிறப்பு விழாவைக் கொண்டாடும் கிறிஸ்மஸ் காலம்- நாம் எந்த மனநிலையில் எந்தக் குழப்பத்தில் இருந்தாலும் எமக்கு எப்போதும் ஒரு மகிழ்வின் காலமேதான்.

"உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக. உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக" (லூக் 2:14) என்று வாழ்த்திய வானதூதரின் செய்தி எமக்கும் உண்மையில் எப்போதும் ஒரு மகிழ்வான செய்தியாகும். இந்தச் செய்தி ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார் என்ற அறிவிப்பை எப்போதும் ஞாபகம் ஊட்டிக்கொண்டே இருக்கும்.

ஆண்டவர் இயேசுவின் பிறப்புப் பற்றிப் பழைய ஏற்பாட்டில் தெரிவிக்கும் "காரிருளில் நடந்துவந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது" (எசாயா 9:2) என்னும் செய்தி இன்றும் எமது வாழ்வனுபவத்தில் ஆழ்ந்த அர்த்தம் காணப்படவேண்டிய செய்தியாகும்.

நீண்டகாலப் போரும், அதன் அனர்த்தங்களும் நிறுத்தப்பட்டு சமாதானத்துக்கும், பேச்சுக்குமான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுக் கடந்த 35 மாதங்களுக்கு மேலாக எதுவுமே நகராத நிலையில் இருப்பது தமிழ் மக்கள் மனதுகளில் ஒரு பய உணர்வையே தொடர்ந்தும் இருக்கச் செய்துள்ளது.

விடுதலைப் புலிகளின் தலைவர் 2004 ஆம் ஆண்டு மாவீரர்தின உரையில் இடைக்காலத் தீர்வுமின்றி, நிரந்தரத் தீர்வுமின்றி, நிலையான வாழ்வும் அமைதியுமின்றி நாம் தொடர்ந்தும் அரசியல் வெறுமைக்குள் சிறைப்பட்டுக் கிடக்கமுடியாது என்று தெரிவித்துள்ளார். அத்துடன் காலதாமதம் இன்றிப் பேச்சுக்களை ஆரம்பிக்கும்படி அவசர வேண்டுகோளையும் அரசுக்கு விடுத்துள்ளார். இந்த வேண்டுகோள் நிராகரிக்கப்படுமேயானால், மீண்டும் போர் மூழும் சூழல் உருவாவது தவிர்க்கப்படமுடியாததுபோல் தெரிகிறது. சர்வதேச உலகும், ஊடகங்களும் இதைத் தெளிவாகப் படித்து உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கும் வேளையில், இதன் நிமிர்த்தமாக என்ன விளைவுகள் ஏற்படுமோ என்ற ஏக்க உணர்வில் தமிழ் மக்கள் குழம்பிப்போய் இருக்கிறார்கள்.

இனியும் போரையும், அதன் கொடூர அனுபவங்களையும் மனதாலும் நினைத்துப் பார்க்க வலிமையற்றவர்களாகத் தமிழ் மக்கள் இருக்கின்ற வேளையில், மீண்டும் ஒரு போர் ஏற்படப் போகிறது என்ற எண்ணமேகூட தமிழ் மக்கள் மனதுகளில் ஏற்படாதவாறு நிலைமையை விரைவாகச் சரிசெய்ய வேண்டும் என, அரசுக்கும் - எதிர்க்கட்சிக்கும் தமிழ் மக்கள் பேரால் வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றோம். அரசியல் லாபங்களையும் யார் பெயர் பெறுவது என்ற வரட்டுக் கௌரவத்தையும் விடுத்து, இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் அமைதியான ஒரு வாழ்வு ஏற்பட வேண்டும் என்ற நோக்குடன், சம்பந்தப்பட்ட அனைவரும் செயற்படும் காலம் இதுவாகும்.

போரால் மிகமோசமாகத் தாக்கப்பட்ட குடும்ப அமைப்புக்கள் பற்றிக் கடந்த ஆண்டில் நாம் சிந்தித்துப் பல திட்டங்களைத் தீட்டி செயற்பட்டோம். குறிப்பாக இளைஞர்களின் கட்டுக்கடங்காத வாழ்வு பற்றிக் கவனம் செலுத்தினோம். அதன் விளைவாகப் பல மாற்றங்கள் இளைஞர்கள் வாழ்விலும், குடும்ப அமைப்புக்களிலும் ஏற்பட்டுள்ளது.

நற்கருணையாண்டு திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்ட நிலையில், ஒரு விசேட கருத்தை உங்கள் முன்வைக்க விரும்புகின்றோம். திருவருகைக் காலத் திருமடலில் நாம் வேண்டிக் கொண்டபடி நற்கருணை ஆண்டுச் செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற வேளையில், தடைப்பட்டுப்போயுள்ள பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு நீதியோடு கூடிய ஒரு நிரந்தரத் தீர்வைத் தமிழ் மக்கள் பெற்றுக்கொள்ள வழிவகுக்க வேண்டுமென நற்கருணை ஆண்டவரிடம் சிறப்பாகச் செபியுங்கள் என்பதே அந்த வேண்டுகோள் ஆகும்.

உலகின் ஒளியாகப் பிறந்த பாலகன் யேசு, எம் மண்ணில் தோன்றிய சமாதானப் பேச்சுக்கள் என்ற ஒளி எம் மண்ணின் மேலும், மக்கள் மேலும் நிரந்தர ஒளியாக மாற வேண்டி நத்தார் புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

மேதகு தோமஸ் சவுந்தரநாயகம்
ஆண்டகை
யாழ். ஆயர்

## இனியொருகால் பிறப்பெடுப்பீர்!

ஈராயிரம் ஆண்டு முன்னே "இரட்சிக்க" வந்தவரே – மனித
மீட்சிக்காய் அஹிம்சை வழிப் போராட்டம் சொன்னவரே!
பாராளும் மன்னர்மனை, பணம் படைத்தோர் செல்வ இல்லம்
யாதேனும் தேடாது,
வேர்வை சிந்தும் உழைப்பாளி யோசேப்பின் மனைவயிற்றில்
பார்போற்றக் கருக்கொண்ட பராபரனின் தூதுவரே!

உம்வரவும் போதனையும் உணர்த்துகின்ற தத்துவங்கள்
ஒன்றிரண்டா? ஆனாலும்
போதனைகள் யாவும் புறக்கிடத்து நீராகப் போனதையா!
பாமரரும் புரிந்துணரும் பான்மையிலே நீர் சொன்ன – கற்
பாறையிலே வீழ்ந்த விதைக் கதையின் தத்துவமும்
மானிடரின் மனப்பாறை மீதினிலே
வேரூன்ற மாட்டாது வீணாகிப் போனதையா!

கெட்டவன் என்றுமே கெட்டவனா யிருப்பதில்லை
கொட்ட மடங்கி ஓர்நாள் குணவானாய் மீள்வனென்ற
தத்துவத்தைக் கூறும் தகுந்த உவமையென
"தந்தையும் இருமகனும்" என்ற கதை சொன்னீரே!
இன்றைய சமூகமதை ஏற்கிறதா? – இல்லையில்லை.

"ஒருகன்னம் அறைந்தார்க்கு மறுகன்னம் கொடு" என்ற
உயர்வான தத்துவத்தை தவறாகப் புரிந்தவர்கள்
கன்னத்தில் கொடுப்பதற்கு கங்கணம் கட்டுகின்றார்.

கருணையின் திருவுருவே, கன்னிமரி பொக்கிஷமே!
மதமென்ற வட்டத்துள் முடங்காது,
மனிதமெனும் பெரும்பரப்பு வெளிநின்று வேண்டுகின்றேன்.
சிலுவை, பிறை, நீறென்னும் சின்னங்கள் பலவெனினும்
இறையியல்பு ஒன்றென்ற உயர்கருத்தை
இனியொருகால் பிறப்பெடுத்து இடித்துரைப்பீர் யேசுவே!

புத்தூர் வே. இளையகுட்டி



# சூரியனைக்கண்டு மலர்ந்த தாமரையல்ல
# புதிய சூரியன்களை உருவாக்க உதித்த மலர்



மனிதர்கள் கிடைப்பதே அரிதா?... அரிதாவதால்தான் கடவுள் அவசியமாகின்றாரா?... வாழ்க்கையின் தத்துவம் தொலைந்துபோய் மிருக வாழ்க்கைக்கும், மனித வாழ்க்கைக்கும் இடையிலான முரண்பாடுகள் அழிந்து எது வாழ்க்கை என்று அறிந்துகொள்ள முடியாத அருவருப்பான சமூகம். ஒரு ஆண் எத்தனை பெண்களையும் திருமணம் செய்யலாம். ஒரு பெண் எத்தனை ஆண்களுடனும் உறவு கொள்ளலாம். விபச்சாரம் எங்கும் வேரூன்றிக் காணப்பட்டது. ஒழுக்கம்... அது எந்தக் கடையில் விற்கிறது? எனக் கேட்கும் சமுதாயம் மனித மாண்பு மதிப்பிட்டு கொலை, கொள்ளை, காமக் களியாட்டத்தால் நிறைந்திருந்தது. மனிதனுக்காக சட்டம். இது மாறி சட்டத்துக்காக மனிதன். இவ்வாறு பூமி பாழடைந்த மண்டபமாய்ச் சீரழிந்து நிற்கையிலே, இறைவன் இனியும் பொறுக்கமுடியாது. மனிதன் மனிதனாக வாழவேண்டும். அவன் எனக்கருகில் நிற்க வேண்டுமெனத் தன் ஒரே மகனை மனிதமகனாக இந்த உலகத்துக்கு அனுப்ப எண்ணினார்.

பிறருக்குத் தன்னைக் கொடுக்கப் பிறப்பெடுக்கும் ஒரு உயிரைக் கருத்தாங்க, எல்லாப் பெண்களாலும் முடியாது. தீமைகளைச் சுட்டெரிக்கும் சூரியனாகவும், எத்தனை சவால்களையும், விமர்சனங்களை எதிர்கொள்ளும் வீரமாகவும் உள்ள பெண்ணால்தான் முடியும். அது கன்னி மரியாள் என இறைதூதர் கபிரியேலீ தேர்ந்துகொண்டார்.

மரியாளுக்கும் சூசையப்பருக்கும் திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. அவர்கள் கூடிவாழுமுன் மரியாள் கருவுற்றிருந்தது தெரியவந்தது. அவர் தூய ஆவியால் கருவுற்றிருந்தார். இதனால் நீதிமானான யோசேப்பு (சூசையப்பர்) மரியாளை அவமானப்படுத்தாமல் மறைவாகவே அவரை விலக்கிவிட எண்ணினார். இதனாலே இறைதூதர் அவர் கனவில் தோன்றி "யோசேப்பே... தாவீதின் மகனே... உன் மனைவி மரியாளை ஏற்றுக்கொள்ள அஞ்சவேண்டாம். ஏனெனில் அவர் கருவுற்றிருப்பது தூய ஆவியால் தான். அவர் ஒரு மகனைப் பெற்றெடுப்பார். அவருக்கு இயேசு எனப் பெயரிடுவீர். ஏனெனில் அவர்தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்" என்றார். (மத் 2/20-21)

எனவே யோசேப்பு தன் மனைவியை ஏற்றுக்கொண்டார். இயேசு பிறக்கும்வரை, அவர் மரியாளுடன் கூடிவாழவில்லை. மரியாளுக்குப் பேறுகாலம் வந்தது. மார்கழிமாதம் இருபத்தைந்தாம் திகதி இரவு பன்னிரண்டுமணி பெத்லஹேமில் ஒரு மாட்டுத் தொழுவத்தில் வைக்கோல்களுக்கு மத்தியில், மனித குரல்களெல்லாம் பாவப்பட்டுப் போனதால், பாவமில்லாத அந்த ஆடு மாடுகளின் அன்பான குரல் ஒலிகளையே கேட்டபடி பிறந்தார் தேவமைந்தன். தம் முதல்வன் பிறந்ததை இயற்கையின் எழில்களில் ஒன்றான விண்மீன்கள் ஞானிகளுக்கு வெளிப்படுத்தின. (மத் 2/2) அந்த விண்மீன்களின் வழிகாட்டலில் சென்று சாம்பிராணியும் வெள்ளைப் போளமும் காணிக்கையாகவைத்து, அவரை வணங்கினார்கள். ஆகவே பிறப்பிலே புதுமையாய்.. ஏழ்மையாய்... எளிமையாய்... வறுமையாய் எந்த உயிரையும் நேசிக்கும் ஒரு மனிதராய்ப் பிறந்தார். அதாவது சூரியனைக் கண்டு மலர்ந்த தாமரையல்ல. புதிய சூரியன்களையே உருவாக்க வந்த தாமரை.

அதாவது குடும்ப உறவுகள் குவலயத்தில் மணம்பரப்ப, மனைகளில் ஒற்றுமை மலிந்திட, பொறாமை, வஞ்சகத்தைப் பொசுக்கிட பணத்திலே மனிதர் பாசம் வைப்பதை விட்டு, மனிதரில் பாசம் வைத்திட உள்ளங்களில் உயர்ந்த எண்ணங்கள் ஊற்றெடுக்க இறைசூரியன் பிறந்துள்ளார்.

இன்று உலகில் தட்டுப்பாடாய் இருப்பது யாதெனில், பிறர் சேவைக்காகத் தன்னை அர்ப்பணிக்கும் மனிதர்கள்தான். இதற்குள் போரா? சமாதானமா? எது வென்று தெரியாத வெறுமையான வாழ்க்கை அழிக்கப்படபோகின்றோமா? ஆழப்போகின்றோமா? விடை தெரியாத வினாக்கள் இந்த நிலையில் எம்மவர்கள் சிலர் இனவிடுதலை நோக்கி சிறையிருப்பு, சித்திரவதை, காயங்கள், மரணங்கள் போன்றவற்றை ஏற்றுக்கொண்டு நிற்கின்றார்கள். இவர்களது வேட்கை விடிவெள்ளி பாலகனால் வெற்றி பெற வேண்டும்.

–செல்வி பத்மநாதன்–

## கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்

ஆயர்கள் வாழ்ந்திட
ஏசு ராஜன்
பேய்களைக் கலைக்க
பூமிக்கு வந்தான்.

விடுதலை வாழ்ந்திட
ஏசு ராஜன்
மனதனை மாற்றி
மனிதன் ஆக்கினான்

ஏழ்மையின் குடிலில்
ஏசு ராஜன்
வறுமையைக் கலைக்க
பொறுமையாய் மலர்ந்தான்.

மார்கழி வணங்கிட
ஏசு ராஜன்
போர்களை நிறுத்திட
மீண்டும்
பூமிக்கு வருவான்.

– நல்லை அமிழ்தன்.

## மனுக்குலத்தின் இரட்சகர்

மனுக் குலத்தின் இரட்சகராய்
மாநிலத் திலே யுதித்த
தனக் குவமை யில்லாத
தயாநிதியே இயேசு பிரான்!

ஆநிரைத் தொழுவி னுள்ளே
அன்னைமரி யம்மை யீந்த
பூவுல கதனை யாளும்
புனிதரே இயேசு பாலன்!

மற்றவர் பாவந் தம்மை
மனநிறை வுடனே யேற்க
நற்றவ வான தூதர்
வாழ்த்திட வந் துதித்தார்!

இறைமகன் இயேசு வள்ளல்
இவ்வுல கொளிர்தல் காணீர்!
கறைதனைக் களைய வந்த
கற்பக தருவே பாலன்!

தத்துவத்தின் வித் தெனவே
தரணி தனிலே யுதித்த
க(ர்)த்தர் வழி நடந்து
கவலை களைத் துடைப்போம்!

~ கூத்திமடு வீ.சீ.குஞ்சீதபாதம்.

# நரசிம்மராவின் உடல் இன்று ஹைதராபாத்தில் தகனம்



இந்தியாவின் முன்னாள் பிரதமரும் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவருமான நரசிம்மராவ் இருதய கோளாறு, நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டு டெல்கியில் உள்ள அகில இந்திய மருத்துவ விஞ்ஞானக்கழக வைத்தியசாலையில் கடந்த 10ஆம் திகதி அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்குத் தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி நேற்றுமுன்தினம் பிற்பகல் மரணமடைந்தார்.

இவரது உடல் வைத்தியசாலையிலிருந்து டெல்கி மோதிலால் நேருபார்க் பகுதியில் உள்ள அவரது வீட்டுக்குக் கொண்டுவரப்பட்டது. அங்கு அவரது பூதவுடலுக்கு ஏராளமான மக்கள் இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.

ஜனாதிபதி அப்துல்கலாம், பிரதமர் மன்மோகன்சிங், துணை ஜனாதிபதி செகாவத், முன்னாள் பிரதமர் வாஜ்பாய், காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியாகாந்தி உட்பட பல்வேறு உயர்மட்டத் தலைவர்கள் நரசிம்மராவ் வீட்டுக்குச் சென்று அவரது பூதவுடலுக்கு மலர்வளையம் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

பின்பு இவரது பூதவுடல் டெல்கி அக்பர் சாலையிலுள்ள காங்கிரஸ் கட்சித் தலைமை அலுவலகத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது அங்கு பொதுமக்கள் அவரது உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

நரசிம்மராவ் மறைவையொட்டி மத்திய அமைச்சரவை கூடி இரங்கல் தெரிவித்தது. 7 நாட்கள் துக்கம் கடைப்பிடிக்கவும் மத்திய அரசு முடிவுசெய்துள்ளது. நாடாளுமன்றத்திலும் நரசிம்மராவ் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து உறுப்பினர்கள் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினார்கள்.

நரசிம்மராவ் பூதவுடல் நேற்று மாலை 3.30மணிக்கு விமானம் மூலம் டெல்கியிலிருந்து ஹைதராபாத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது. அங்கு பொதுமக்கள் இறுதி அஞ்ச



லிக்காக வைக்கப்பட்டது. அவரது உடல் இன்றுமாலை 3.30 மணிக்கு ஹைதராபாத்தில் அரச மரியாதையுடன் தகனம் செய்யப்படவுள்ளது.

ஹைதராபாத்திலுள்ள உஷேன் நகர் ஏரிக்கரையில் அவரது உடலைத் தகனம் செய்ய உறவினர்கள் முடிவுசெய்துள்ளனர். இறுதிச் சடங்கு நடத்தும் புத்த பூர்ணிமா பூங்காவில் நினைவுச் சின்னமும் அமைக்கப்படவுள்ளது.

இறுதிச்சடங்கு நிகழ்ச்சியில் முக்கிய தலைவர்கள் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

இறுதிச்சடங்கு நடக்கும் பூங்கா பகுதியில் என்.டி.ஆர்.சமாதி, சென்னாரிட்டி சமாதி ஆகியன உள்ளன.

நரசிம்மராவ் மறைவுக்கு அமெரிக்க அதிபர் ஜோர்ச் டபிள்யூ புஷ் உட்பட பல்வேறு உலகத் தலைவர்களும் அனுதாபம் தெரிவித்துள்ளனர். நரசிம்மராவ் 1921ஆம் ஆண்டு ஜுன் 26ஆம் திகதி ஆந்திர மாநிலம் கரீம் நகரில் விவசாய குடும்பத்தில் பிறந்தவர்.

1957ஆம் ஆண்டு ஆந்திரவில் மதானி சட்டசபைத் தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு எம்.எல்.ஏ ஆனார். சஞ்சீவரெட்டி அமைச்சரவையில் சட்டம் மற்றும்செய்தித் துறை அமைச்சராகப் பணியாற்றியுள்ளார்.

இந்திராகாந்தி மற்றும் ராஜீவ்காந்தி ஆகியோரது ஆட்சிக்காலத்தில் மத்திய அமைச்சராகவும் பணியாற்றியதுடன் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்துள்ளார்.

1991 இல் ராஜீவ் காந்தி இறந்த பிறகு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில் அதிக இடங்களைப் பிடித்த கட்சி என்ற அடிப்படையில நரசிம்மராவ் தலைமையில் காங்கிரஸ் ஆட்சியமைத்தது. ஐந்து ஆண்டுகள் இந்தச் சிறுபான்மை அரசு நீடித்தது.

தென் மாநிலத்தில் இருந்து பிரதமரான முதல் தலைவர் நரசிம்மராவ்தான். அரசியல் சாணக்கியர் என்று வர்ணிக்கப்பட்ட இவர் பொருளாதார மேதையாகத் திகழ்ந்தார். சிக்கலான நேரத்தில் இவரது நிர்வாக, பொருளாதார நடவடிக்கைகள் மூலம் இந்தியாவைப் பொருளாதாரப் பின்னடைவுக்குள் தள்ளாமல் காப்பாற்றியவர் எனக் கூறப்படுகிறது.

## ஹொண்டூரஸ் நாட்டில் பயணிகள் பஸ் மீது தாக்குதல் 23 பேர் பலி, 16 பேர் காயம்!



ஹொண்டூரஸ் நாட்டில் பயணிகள் பஸ் மீது இனந்தெரியாத ஆயுதபாணிகள் மேற்கொண்ட தாக்குதலில் 23 பேர் கொல்லப்பட்டதுடன் 16 பேர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் கொண்டூரஸ் நாட்டின் தலைநகரிலிருந்து 200 கி.மீற்றர் தொலைவில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலுக்குள்ளான பஸ் பெரும்பான்மையாக பெண்கள் மற்றும் சிறுவர்களுடனேயே சென்றதாகவும், இதன்போது காரில் வந்தவர்கள் பஸ்ஸை நிறுத்திசரமாரியாக துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

தாக்குதல் நடந்த இடத்தில் 16 பயணிகள் உயிரிழந்ததுடன் ஏனையோர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த தாக்குதலானது காட்டு மிராண்டித்தனமானதும், கொடூரமானதுமென ஹொண்டுரஸ் ஜனாதிபதி றிக்காடோ மாதுரோ தெரிவித்தார்.

## உலக நோக்கு

## பதவி நீக்கப்பட்ட சோமாலிய பிரதமர் மீண்டும் தனது பதவியை ஏற்றார்



கடந்த இருவாரங்களுக்கு முன்னர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட சோமாலியப் பிரதமர் அலிமுகமட் கெடி மீண்டும் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கெடியினால் அமைக்கப்பட்ட அமைச்சரவை கறுப்பு இனத்தவர்களின் 5 குழுக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தவில்லையெனத் தெரிவித்து இவரது அமைச்சரவையினை அங்கீகரிக்க சோமாலிய நாடாளுமன்றம் மறுத்திருந்தது.

இதனை அடுத்து இவரது அமைச்சரவையினைக் கலைத்து சோமாலிய நாடாளுமன்றம் இவருக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தினைக் கொண்டுவந்து கெடியினைப் பதவியில் இருந்து நீக்கியது.

ஆனால், நேற்று மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெரும்பான்மையாக கெடிக்கு வாக்களித்ததைத் தொடர்ந்து அவர் பிரதமராகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இதனை அடுத்து அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தனது நன்றியினைத் தெரிவித்துள்ள கெடி, அனைவருடனும் கலந்தாலோசித்து புதிய அமைச்சரவையை அமைக்கப்போவதாக தெரிவித்துள்ளார்.

கெடி, புதிய அமைச்சரவையை அமைப்பதற்கு ஒருமாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 13 வருடங்களாக சோமாலியாவில் இனக் குழுக்களிடையே மோதல்கள் இடம்பெற்று வருகின்ற அதேவேளை தேசிய அரசாங்கம் இன்றியே அவை செயற்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தாய்லாந்தில் குண்டுவெடிப்பு ஒருவர் பலி ஆறுபேர் காயம்

தாய்லாந்தின் தென்பகுதியில் உள்ள வர்த்தக வங்கி ஒன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் ஆறுபேர் படுகாயமடைந்தனர்.

தாய்லாந்தின் தென்பகுதி மாகாணமான சண்கைய் பொலொக்கின் நரதிவற் நகரில் உள்ள சயம் வர்த்தக வங்கிக் கிளையின் வாகனத்தரிப்பிடத்திலேயே இக்குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது. சண்கைய் பொலொக் மாகாணம் மலேசிய உல்லாசப் பயணிகளை மிகவும் கவர்ந்த நகரம் என்றும் உல்லாசப் பயணிகளது வருகையைத் தடுத்து நிறுத்தும் வகையில் இந்த தாக்குதல் மேற்காள்ளப்பட்டதாக தாய்லாந்துப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தாய்லாந்தின் கொலொக் மகாணத்தின் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் ஒன்றான நரதிவற் நகரம் பலமுறை முஸ்லிம் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி உள்ளது.

கடந்த மார்ச் மாதத்திற்குப் பின்னர் கொலொக் மாகாணத்தில் இடம் பெற்ற மூன்றாவது பாரிய குண்டு வெடிப்பு இதுவாகும்.

கடந்த ஒக்ரோபர் மாதம் இந்நகரத்தில்



இரவு கேளிக்கை விடுதி ஒன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் மலேசிய உல்லாசப் பயணி ஒருவர் கொல்லப்பட்டதுடன் 20 பேர் காயமடைந்தனர்.

இம்மாகாணத்தின் கரையோரத்தில் உள்ள பொலிஸார் பாதுகாப்பினைத் தளர்த்தியுள்ளதாலேயே இந்தக் குண்டுவெடிப்புக்கள் இடம்பெறுவதாகவும் பெரும்பாலானோர் சோதனைகள் இன்றியே நகரத்தினுள் நுழைவதாகவும் பி.பி.சி.செய்தியாளர் தெரிவித்தார்.

இக்குண்டு வெடிப்பினை அடுத்து எல்லையோரப் பாதுகாப்பிற்காக மேலும் 2000 பொலிஸார் அழைக்கப்பட்டுள்ளனர்.

## ஈராக்கின் மொசூல் நகருக்கு டொனால்ட் ரம்ஸ்பீல்ட் விஜயம்!



ராக்கின் மொசூல் நகரில் அமைந்துள்ள அமெரிக்க இராணுவ முகாம் மீது கிளர்ச்சிவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் 22 பேர் கொல்லப்பட்டதற்கு மறுநாள் அமெரிக்க பாதுகாப்பு செயலர் ரம்ஸ்பீல்ட் அங்கு திடீரென விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

மொசூல் நகருக்கு செல்வதற்கு முன்னர் ரம்ஸ்பீல்ட், கிளர்ச்சிவாதிகளின் தாக்குதலில் காயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் படையினரை வைத்தியசாலையில் சென்று பார்வையிட்டார். அங்கு அவர் படையினருக்கு தான் வந்திருப்பது அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதற்கெனக் கூறியவர், அனைவருக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

அத்துடன், உங்களுக்கு நான் ஆழமான நன்றிக் கடனுள்ளவனாக உள்ளேன் நீங்கள் பத்தோ அல்லது இருபதோ அல்லது முப்பதோ நாட்களுக்குள் மீள திரும்பிச் செல்லலாம். ஆனால் நீங்கள் எமக்கு முக்கியமானவர்கள். கிளர்ச்சிவாதிகள் தோற்கடிக்கப்பட்டு ஈராக் ஸ்திரத்தன்மைக்குக் கொண்டுவரப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை ஈராக்கில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள தேர்தலைக் கண்காணிப்பதற்கு வரும் சர்வதேச கண்காணிப்பாளர்களின் தங்குமிடம் ஜோர்தானிலேயே அமைக்கப்படுமென ஐ.நா.அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே பாக்தாத்தின் வடபகுதியான பகுபாவில் அமெரிக்க மற்றும் ஈராக் படைகளுக்கெதிராக கிளர்ச்சிவாதிகள் பாரிய தாக்குதலை நடத்தியுள்ளதாக செய்திகள் தெரிவித்தபோதும், சேதவிபரம் குறித்த தகவல்களைப் பெற முடியவில்லையெனவும் தெரியவருகிறது.

## நேபாளத் தலைநகரின் போக்குவரத்து இரண்டாவது நாளாகவும் தடைப்பட்டது

(காத்மண்டு)

நேபாளத் தலைநகருக்கான போக்குவரத்தை மாவோ கிளர்ச்சிவாதிகள் தடைசெய்துள்ளதால் நேற்றைய தினமும் தலைநகருக்கான போக்குவரத்துக்கள் இடம்பெறவில்லை.

பாதை தடை செய்யப்பட்டுள்ள போதிலும் வீதிகளில் கிளர்ச்சிவாதிகள் எவரையும் காணமுடியவில்லையென செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனாலும், வீதிகளில் பயணம் செய்யும் வேளை வாகனங்களை கிளர்ச்சிவாதிகள் பறித்தும் மற்றும் பொருட்களைக் கொள்ளையடித்தும் விடுவார்கள் என்ற அச்சத்தால் சாரதிகள் வாகனங்களைச் செலுத்தாமல் உள்ளனர்.

தமக்குப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாத காரணத்தால் தம்மால் வாகனங்களைச் செலுத்தமுடியாதெனவும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்வரை தமது வாகனங்கள் வீதிகளிலேயே நிறுத்தப்படுமெனவும் வாகன உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால், பிரதான வீதியில் படையினர்



நிறுத்தப்பட்டுள்ளதாக நேபாளஉட்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை நேற்றுமுன்தினம் இந்திய - நேபாள எல்லைப் பகுதியில் படையினருக்கும் மாவோ கிளர்ச்சிவாதிகளுக்குமிடையில் இடம்பெற்ற மோதலில் 34 பேர் கொல்லப்பட்டனர். இதில் பெருமளவு கிளர்ச்சிவாதிகளுடன், படையினர் மற்றும் பொதுமக்களும் அடங்குவதாகச் செய்திகள் தெரிவித்தன.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சட்ட உதவிகள் நிறுவனம் முன்பாக அன்னையர் முன்னணி ஆர்ப்பாட்டம்







காணாமற்போனோர் பாதுகாவலர் சங்க அன்னையர் முன்னணியினர் - நேற்று சட்ட உதவிகள் மன்ற நிறுவனத்தின் முன்பாக மறியற் போராட்டத்தில் ஈடுபட்டதனைக் காணலாம்.

யாழ்.குடாநாட்டில் 1996, 1997 ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போன தமிழ் இளைஞர்கள் யுவதிகள் தொடர்பாக யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனத் தெரிவித்து - காணாமற்போனோர் பாதுகாவலர் சங்க அன்னையர் முன்னணியினர் நேற்று மறியற்போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம், மூன்றாம் குறுக்குத்தெருவில் உள்ள இலவச சட்ட உதவிகள் நிறுவனத்தின் முன்பாகவே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

யாழ்.மேல் நீதிமன்றத்தில் தமது பிள்ளைகள் தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனுக்கள் மீது - படையினரின் தரப்பில் ஆஜராகும் சட்டத்தணி ஒருவர் - படையினரால் குறிப்பிட்ட இளைஞர்கள் கைதுசெய்யப்படவில்லை எனக் குறிப்பிட்டு மன்றுக்கு விளக்கமளித்துள்ளமையானது துரோகத்தனமானதாகும்.

எனவே, குறிப்பிட்ட இந்தச் சட்டத்தரணி தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் வசித்துவருகிறார் என்ற அடிப்படையில் அவர் இவ்வாறு கூறுவது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றம் சுமத்தினர்.

இதேவேளை, கிருஷாந்தி குமாரசாமி கொலை வழக்கில் மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கும் லான்ஸ் கோப்ரல் ராஜபக்ஷ - குறிப்பிட்ட காலப்பகுதியில் படையினரால் தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர் எனவும், கைதானவர்களில் சிலர் கொலை செய்யப்பட்டு செம்மணியில் புதைக்கப்பட்டதாகவும் மன்றில் தெரிவித்திருந்தார். இதனையடுத்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் செம்மணி வெளியில் இனங்காட்டப்பட்ட மனித புதைகுழிகளைப் பார்வையிட்டும் சென்றனர்.

இது இவ்வாறிருக்க படையினர் தரப்பில் ஆஜராகும் தமிழ் சட்டத்தரணி படையினருக்குச் சார்பாக வாதிட்டு படையினரின் செயற்பாடுகளுக்கு ஆதரவாகச் செயற்படுகிறாரா? அரசாங்கம் தமிழ் மக்களை ஏமாற்றுகின்றதா? எனப் போராட்டத்தில் ஈடுபட்டோர் தெரித்தனர்.

தமது போராட்டத்துக்கு உரிய தீர்வு கிடைக்காதுவிட்டால் தமது போராட்டம் விஸ்தரிக்கப்படும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

# சம்பளஉயர்வு சுற்றுநிருபம் திறைசேரி அனுப்பியது!

வரவு - செலவுத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அரச துறையினருக்கான சம்பள உயர்வு பற்றிய சுற்று நிருபம் அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், திறைசேரி சம்பள உயர்வு கொடுப்பதற்குத் தேவையான நிதியை ஏற்கனவே ஒதுக்கியுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. பவ்வேறு கட்டங்களில் சம்பள உயர்வு திருத்தங்கள் அமுல் செய்யப்படும். பூர்வாங்கக் கட்டத்தில் அரச ஊழியர்களுக்கு 2500 ரூபா அல்லது 50 சதவீத உயர்வு வழங்கப்படும்.

இரண்டாவது கட்டத்தில் நிர்வாகத்துக்கான தேசிய மன்றம் புதிய சம்பள அமைப்புப் பிரகாரம் சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்கு திட்டம் ஒன்றைத் தயாரிக்கும் இந்தப் பணி அடுத்த ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன் பூர்த்தி அடையும். புதிய சம்பள அமைப்பு 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி அமுலுக்கு வரும்.

புதிய சுற்றுநிருபத்தின்படி அரசாங்க ஊழியர்களுக்கான கூட்டுச் சம்பளப்படியும் அதிகரித்துள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. புதிய சம்பள விகிதத்தில் தற்போது அமுலில் உள்ள 10 சதவீத இடைக் காலப் படியும் வழங்கப்படும்.

சகல ஓய்வூதியக்காரர்களுக்கும் அடுத்த மாதம் முதலாம் வாரத்தில் இருந்து அதிகரிக்கப்பட்ட படியோடு ஓய்வூதியம் வழங்கப்படும்.

2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்துக்குரிய நிலுவைகள் அடுத்த மாத சம்பளக்கொடுப்பனவுடன் சேர்க்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

# இலங்கைத் தூதரக ஊழியர்கள் கனடாவில் தலைமறைவு!

(ரொரன்டோ)

கனடாவில் உள்ள இலங்கைத் தூதுவராலயத்தில் பணிபுரிந்த ஊழியர்கள் பலர் தலைமறைவாகி விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதில் சிலர் அரசியல் தஞ்சம் கோரியுள்ளதாகவும் தெரியவருகிறது.

இது தொடர்பாக ரொறன்ரோவின் தூதுவராலய அதிகாரி இந்தச் செய்தியை மறுக்கவோ உறுதிப்படுத்தவோ மறுத்துவிட்டார். தலைமறைவாகிப்போன ஊழியர்களில் பொரும்பாலானோர் சிங்கள ஊழியர்கள் மற்றயவர்கள் முஸ்லிம்கள் ஆவர்.

முன்னைய காலங்களிலும் தூதுவராலய ஊழியர்கள் தங்கள் பணிக்காலம் முடியும் தருணத்தில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர்.

அண்மைக் காலமாக அரசியல் தஞ்சம் கோரும் தமிழர்களது விண்ணப்பங்கள் பெரும்பாலும் நிராகரிக்கப்பட்டுவருகின்றன. அப்படி நிராகரிக்கப்பட்டவர்கள் குடிவரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

# பொலிஸ் அதிகாரிகளுக்கும் பல்கலைக்கழக வாய்ப்பு!

## பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தொழிலுடன் கூடிய உயர் கல்வி வாய்ப்பினைப் பெறும் நோக்கில் - பல்கலைக்கழக கல்வியை ஆரம்பிப்பது தொடர்பான சட்டத்தை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான புதிய பாடநெறியை ஆரம்பிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

பல்கலைக்கழக பாடநெறிகளுக்கு பொலிஸ் உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு சிறந்த சேவையை வழங்கும் நோக்கில் தேவைப்படும் அறிவையும், பின்னணியையும் ஏற்படுத்துவதே இந்தப் பாடநெறியின் நோக்கமாகும்.

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் தற்போது நடைபெற்றுவரும் டிப்ளோமா பாடநெறியை பல்கலைக் கழகத்துடன் இணைத்துத் தொடர்புபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் மூலம் பொலிஸ் அதிகாரிகள் தமது கடமைகளுக்கிடையில் இந்தப் பாடநெறியை பின்பறறுவதற்கு இயலுமாக இருக்கும்.

பொலிஸ் சேவையில் பலவித தரங்களில் உள்ளவர்களுக்கேற்ப இந்த உயர் பயிற்சிப் பாடத்திட்டம் வழங்கப்படும், இந்தப்பாடத்திட்டம் அடுத்த வருடம் டிசெம்பர் மாதம் நிறைவடையும் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க - இந்தப் பயிற்சிப் பாடத்திட்டம் ஆரம்பிக்கப்படுவதானது முக்கியமானதாகும். இதன்மூலம் பொலிஸ் அதிகாரிகளுக்கு பட்டம் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

அத்துடன், பொலிஸ் சேவை குறித்து பலரும் விமர்சனம் செய்யும் இந்த வேளையில் இவ்வாறான பயிற்சி நெறியை ஆரம்பிப்பது நல்லதொரு செயலாகும். பலரும் இன்று பொலிஸ் சேவையை விமர்சனம் செய்கின்றனர். ஆனால், பொலிஸார் பல்வேறு நடைமுறை சிக்கல்களைச் சந்தித்தே தமது அரச கடமையை செய்கின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.(தே)

## கொடிகாமம் பகுதி...

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரன், சிவநேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் இந்த நிகழ்வில் உரையாற்றுகையில் தமிழ்மக்கள் அங்கீகாரம் வழங்கிய இடைக்கால வரைபின் அடிப்படையில் ஜனாதிபதி சந்திரிகா புலிகளுடன் பேசவேண் டும். யுத்தத்துக்கான தயார்ப்படுத் தலை கைவிடவேண்டும். இனரீதியான பாகுபடுத்தலை கைவிட்டு, நாட்டின் தலைவி என்ற ரீதியில் செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அரச ஊழியர்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள், மாணவர்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர். இந்த எழுச்சிப் போராட்டம் காரணமாக கொடிகாமத்தில் மக்கள் செயற்பாடுகள் 1 மணிநேரம் பாதிப்படைந்தன.

## புதிய...

தெரிவிக்கின்றன.

இதே நேரம் ஊவா மாகாணத்திலுள்ள குடாஓயா காட்டிலும் சர்வதேச தரத்தில் விமான ஓடுபாதை அமைக்கத் திட்டம் தீட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஆண்...

அணுகுமுறை காரணமாகக் கடைசி நேரத்தில் இந்தப்பயணம் ரத்துச் செய்யப்பட்டிருந்தது. இதனால் நேற்று பெண் போராளிகள் எவருமின்றி 50 ஆண் போராளிகள் மட்டுமே கிளிநொச்சி திரும்பினர்.

செங்கலடி - பதுளை வீதி, கொடுவாமடு பாலம் இராணுவ முன்னணி காவல் நிலையம் முதல் ஓமந்தை இராணுவ முன்னணி காவல் நிலையம்வரை இந்தப் பயணத்திற்குப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வழித்துணையுடன் இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

பெண் போராளிகள் கறுப்பு நிறு இடுப்புப்பட்டி அணிந்து பயணம் செய்வதற்கு இராணுவம் தெரிவித்த எதிர்ப்புக் காரணமாக எழுந்துள்ள பிரச்சினைக்கு இதுவரை தீர்வொன்று எட்டப்படாத காரணத்தால், இந்தப் பயணத்தில் பெண் போராளிகள் இடம்பெற்றிருக்கவில்லை என விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டது.

இந்த விவகாரத்திற்குச் சமாதானச் செயலகங்கள் ஊடாகத் தீர்வு காணவேண்டும் என்று தற்போது முடிவெடுக்கப்பட்டுள்ளது. எனினும் இதுவரை முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் இது தொடர்பாக முடிவொன்றைக் காண்பதில் ஈடுபட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## இனப்பிரச்சினைத் தீர்வுக்கு

# சர்வதேச ஒத்துழைப்பை பெறக் கோருகிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் சகல தரப்பினருக்கும் விளக்கமளித்து, அவர்களது ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

அண்மையில் நடந்த ஜே.வி.பியின் மத்திய செற்குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்தில் மேலும் -

எத்தகைய இக்கட்டான நிலைமையிலும் கூட இலங்கையின் இறைமை, ஒருமைப்பாடு, ஐக்கியம் என்பவற்றைப் பாதுகாக்கும் வகையில் செயற்படவேண்டும்.

வடக்கு - கிழக்கு பிரச்சினையைச் சகல மக்களதும் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலும், ஜனநாயகத்தைப் பேணும் வகையிலும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

தற்போது ஸ்தம்பிதமடைந்துள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பித்து தேசிய பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் பொறுப்பெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (தே)

## தெளிவான நிலைப்பாட்டை...

தெரிவித்ததாவது -

விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையின் அடிப்படையில் பேச்சுக்களை நடத்துவதற்கு ஜே.வி.பியினர் எதிர்ப்பை வெளிக்காட்டிவருகின்றனர். எனவே நாம் தெளிவாக வற்புறுத்திக் கேட்டுக் கொள்வது என்னவெனில் - மயக்கம்தரும் வகையில் இல்லாத, தெளிவான நிகழ்ச்சிசிரலை அரசாங்கம் தரவேண்டும்.

அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்ட புதிய நிகழ்ச்சி நிரலை எமது தலைமை மிகவும் கவனமான முறையில் அதன் உள்ளடக்கையை ஆராய்ந்தபோதிலும் அதில் திருப்தியடையவில்லை.

விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பாக அரசாங்கத்தின் பிரதான பங்காளிககட்சி எதிர்த்துவரும் நிலையில் ஜனாதிபதில் இதில் தெளிவற்றவராகக் காணப்படுகின்றார். எனவே, நாம் தெளிவாகக் கேட்பது என்னவெனில்- விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபைதான் பேச்சுக்கு அடிப்படையாக உள்ள நிலையில், இது தொடர்பாக மேலெழுந்த வாரியாக இல்லாமல் ஜனாதிபதி தெளிவான நிலைப்பாட்டை அறிவிக்கவேண்டும்.

எனவே எமது தலைமைப்பீடத்தின் இந்த நிலைப்பாட்டை இலங்கை அரசாங்கத்துக்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் எனத் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 25.12.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தென்மராட்சியில்

# 1,467 குடும்பங்களுக்கு ஜனவரியில் கொடுப்பனவு

(மட்டுவில்)

தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு பெற்றுக்கொள்ளாத ஆயிரத்து 467 குடும்பங்களுக்கு ஜனவரி முதல் வாரத்தில் 25 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்று நிகொட் தெரிவித்துள்ளது.

வரணி, இயற்றாலை, மந்துவில், கைதடி பகுதிமக்கள் மீளக்குடியமர்ந்து இரண்டு வருடங்களாகியும் தமக்கு மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து யாழ். செயலகம் முன் இந்தமாத நடுப்பகுதியில் மறியற் போராட்டம் நடத்தினர்.

இதன்பின்னர் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்படாத மக்கள் பிரதிநிதிகள் அரசாங்க அதிபர் செ.பத்மநாதனைச் சந்தித்தபோது மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்குவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்திருந்தார்.

இதனையடுத்து ஆயிரத்து 467 பேருக்கு மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்குவதற்கு தெரிவுசெய்யப்பட்டு, அவர்களுக்கு கொடுப்பனவு வங்கிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பான கடிதங்கள் குறித்த வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், கடிதம் கிடைத்தவர்கள் ஜனவரி முதல் வாரத்திலேயே கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (24)

# தகவல் தொழில்நுட்ப கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தகவல் தொழில் நுட்ப கற்கை நெறியைத் தொடர்வதற்கு யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

அதாவது தகவல் தொழில்நுட்ப பாடத்தைக் கற்பிப்பதில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் 50 வயதுக்கு குறைவாக இருக்க வேண்டும். கற்கை நெறியின் பின்னர் கல்விப் புலத்தில் 5 வருடங்கள் சேவையாற்ற வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை அதிபரின் சிபார்சுடன் எதிர்வரும் 31 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நேரடியாக வலயக்கல்வி அலுவலகத்துக்கு வருகை தருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

# முற்றவெளியில்

# தனியார் பஸ் தரிப்பிடம் அமைக்கும் பணி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். முற்றவெளிப் பகுதியில் தனியார் பஸ்தரிப்பிடம் அமைப்பதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதன் ஆரம்பகட்ட நடவடிக்கையாக பற்றைகள் அகற்றப்பட்டு, தரை செப்பனிடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இது குறித்து யாழ்.மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா கருத்துத் தெரிவிக்கையில்-

தற்பொழுது தனியார் பஸ் தரிப்பிடம் அமையவுள்ள இடத்தில் பயணிகள் தங்கும் கொட்டகைகள், கடைத்தொகுதிகள் என்பன நிறுவப்படவுள்ளன என்றும், இந்த பஸ் தரிப்பிடம் அமையப் பெற்றதும் சகல தனியார் வாகனங்கள் மற்றும் கொழும்பிலிருந்து வரும் வாகனங்கள் யாவும் இங்கேயே நிறுத்தப்படும் என்றும் தெரிவித்த அவர் - தைப்பொங்கலுக்குப் பின்னர் இந்த பஸ்தரிப்பிடம் அமைக்கப்பட்டு விடும் என்றும் தெரிவித்தார். (த)

# நெடுந்தீவுக் கடற்பரப்பில் மீண்டும் இந்திய இழுவைப்படகுகள் நடமாட்டம்

நெடுந்தீவு கடற்பரப்பில் பல நூற்றுக் கணக்கான இந்திய இழுவைப்படகுகள் கடந்த சில வாரங்களாக அத்துமீறி நுழைந்து, மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவருவதால், நெடுந்தீவுப் பகுதி மீனவர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

யாழ். குடாநாட்டுடன் தொடர்புகள் இன்றி, நாட்டில் யுத்த சூழல் இருந்த வேளையில் மீன்பிடித்தலில் அத்துமீறி ஈடுபட்டது போன்று தற்போதும் பல நூற்றுக்கணக்கான இழுவைப் படகுகள் தொழிலில் ஈடுபடுவதுடன், நெடுந்தீவுப் பகுதி மீனவர்களது தொழில் உபகரணங்களையும் சேதமாக்க ஆரம்பித்துள்ளனர்.

வாரத்தில் திங்கள், புதன், சனி ஆகிய மூன்று தினங்களும் இந்திய இழுவைப்படகுகள் அத்துமீறி நுழைந்து தொழிலில் ஈடுபடுவதால், இந்தத் தினங்களில் மீனவர்கள் தொழிலுக்குச் செல்லமுடியாத நிலையில் வீட்டில் முடங்கிக்கிடக்க வேண்டியுள்ளதுடன், பெரும் பொருளாதார நெருக்கடிக்குள்ளும் தள்ளப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இந்த அத்துமீறிய மீன்பிடித்தல் தொடர்பாக நெடுந்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் மகஜர்கள் கையளித்தபோதும், உரியவர்களால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி இவ்வாறு அத்துமீறி தொழில் செய்தபோது பதினைந்து இழுவைப்படகுகளுடன் சுமார் 60 மீனவர்கள் நெடுந்தீவு மீனவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (113)

# சுருக்கெழுத்து கழகத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 19 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், 17 ஆவது சான்றிதழ் வழங்கும் வைபவமும் இன்று பிற்பகல் 2 மணிக்கு வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் கழகத் தலைவர் சி.குலசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் - வடமாகாண இலங்கை வங்கி பொது முகாமையாளர் க.பாலசுப்பிரமணியம் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணம் மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி கௌரவ விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாணவர்களின் சிறப்பு நிகழ்ச்சிகளாக 'திருப்புமுனை' என்ற நாடகமும், சுருக்கெழுத்து மேதை சேர் ஐசாக் பிற்மன் என்ற தலைப்பில் வில்லிசையும் இடம்பெறவுள்ளது. (116)

# கடன்வழங்கு கூட்டுறவு சங்க சமாசப் பொதுக்கூட்டம்!

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சமாசத் தலைவர் எஸ்.சிவசுப்பிரமணியம் தலைமையில் கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பான கூட்ட நிகழ்ச்சி நிரலும், அதிகாரக் கடிதமும், வரவு-செலவுத்திட்டமும் அங்கத்துவ சங்கங்களுக்கு அனுப்பிவைக்கபட்டுள்ளது.

தற்போது சமாசத்துடன் தொடர்பில்லாத சங்கங்கள் இவற்றைச் சமாசக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளுமாறு பதில் மாவட்டச் செயலாளர் அறிவித்துள்ளார்.

வரவு - செலவுத் திட்டத்தை விரிவாகப் பார்வையிட விரும்பும் சங்கங்கள் இதை அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

# நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்த புகையூட்டல் நடவடிக்கை!

(யாழ்ப்பாணம்)

நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், நெல்லியடிச் சந்திப் பகுதியில் அண்மையில் புகையூட்டல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கிராமங்கள் தோறும் இவ்வாறான புகையூட்டல் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு, சுகாதாரப் பகுதியினர் அறிவித்தமைக்கு இணங்க வடமராட்சி இராஜகிராமம் பகுதியிலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

யாழ்.மாவட்ட சுகாதாரக் கழகத்தின் அனுசரணையுடன் வடமராட்சி சுகாதார அதிகாரியினால் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்த நடவடிக்கைக்கு தேவையான எரிபொருளை நெல்லியடி வர்த்தக சங்கமும், வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச சபையினரும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (12)

# ஐ.ஒ.எம் நிறுவனத்தினால் முன்பள்ளிகள் புனரமைப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரதேசத்திலுள்ள இரு முன்பள்ளி நிலையங்கள் ஐ.ஒ.எம் நிறுவனத்தினரின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

நெடுந்தீவு மத்தி சென்.ஜோன்ஸ் முன்பள்ளி, நெடுந்தீவு கிழக்கு குழந்தையேசு முன்பள்ளி ஆகிய இரண்டுமே தற்போது புனரமைக்கப்பட்டு, விஸ்தரிக்கப்பட்டு வருகிறது.

இந்தியாவில் இருந்து மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு பெருமளவு உதவிகளைச் செய்து வரும் இந்த நிறுவனம் தற்போது இதே போன்று முன்பள்ளி நிலையங்களையும், திருத்தம் செய்து விஸ்தரிக்கின்றமை மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்தாகும். (113)

# கொடுப்பனவு வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பொது நூலகத்தில் அமையவுள்ள இறுவட்டு நூலகத்துக்குத் தேவையான கொடுப்பனவுகளை அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக, யுனெஸ்கோ அமைப்பைச் சேர்ந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் யாழ். பொது நூலகத்துக்கு விஜயம் செய்த இவர்கள் நூலகரைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே இவ்வாறு தெரிவித்தனர்.

இதேவேளை, யுனெஸ்கோ அமைப்பால் யாழ். பொது நூலகத்தில் ஏற்படுத்தப்படவிருக்கும் நடமாடும் நூலகத்தை எதிர்வரும் ஜனவரி மாதமளவில் யாழ். பொதுநூலகத்திடம் கையளிக்கவிருப்பதாகவும் தெரிய வருகிறது.

# சின்னஞ்சிறு செய்திகள்

## தென்னை நாற்றுகளுக்கு விண்ணப்பிக்கலாம்!

புத்தூர் சந்தியில் உள்ள சாவகச்சேரி கமநலசேவை திணைக்களத்தால், நாற்றுமேடை போடப்பட்ட தென்னங்கன்றுகள் ரூபா 25 வீதம் விநியோகிக்கப்படவுள்ளன.

தேவையானோர் சாவகச்சேரி கமநலசேவை திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளமுடியும். (29)

## மாதாந்த பொதுக்கூட்டம்

நீர்வேலி சேவி கண்ணாடித் தொழிற்சாலை ஊழியர்களின் மாதாந்த பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி கோயில் முன்றலில் நடைபெறவுள்ளது.

இதில் சங்கத்தின் அனைத்து ஊழியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## வடமராட்சி அதிபர், ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட அனைத்து அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு 2005 ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டங்கள் தயாரிப்பது தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் இடம் பெறும்.

இந்தக் கலந்துரையாடலில் மேற்படி கல்வி வலயத்துக்குட்பட்ட சகல அதிபர், ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக்கல்விப்பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் அறிவித்துள்ளார்.

## யாழ்.நீதிமன்றில் வீதி விபத்து தொடர்பான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வீதி விபத்து தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் ஜனவரி மாதம் 7 ஆம் திகதி யாழ்.நீதிவான் நீதிமன்றில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.மாநகரசபை ஆணையாளர் கலாநிதி குணராசா மற்றும் பொலிஸ் அதிகாரிகள், மோட்டார் போக்குவரத்து திணைக்கள் அதிகாரிகள் ஆகியோர் இதில் பங்குபற்றிக் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

## ஒளிவிழா நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஒளிவிழா நிகழ்வு எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்.பலநோக்கு கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

## திருவாசக விழா

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் நடத்தும் திருவாசக விழா நாளை மாலை 5 மணிக்கு மட்டுவில் மாகாளி அம்பாள் தேவ கோட்டத்தில் நடைபெறவுள்ளது.

இதில் 'கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே' எனும் பொருளில் ஆசிரிய ஆலோசகர் கந்த சத்தியதாசன் சிறப்புரை நிகழ்த்தவுள்ளார்.

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : யோண்டனிஸ்
முகவரி : சுவிஸ்.

அகவை எட்டு



பெயர் : செ.ர்ராகுல்
முகவரி : கனடா.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ------------------------------

முகவரி : ------------------------------

பிறந்த ஆண்டு: ------------------------------



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------------

பெற்றோர் ஒப்பம்

# ஒல்லாந்தர் காலத்து புராதன சின்னங்கள் ஆனையிறவு பகுதியில் அழியும் நிலையில்

(ஆனையிறவு)

ஆனையிறவு இராணுவ முகா முக்கு மேற்குப் பக்கமாக ஏ-9 வீதிக்கு இருமருங்கிலும் ஒல்லாந் தர் காலத்தில் நான்கு வரிசையாக கட்டப்பட்டிருந்த முக்கோண வடி வத்திலான கற்கள் - அண்மையில் ஏ-9 வீதி திருத்தத்தின்போது பாரிய வாகனங்களால் புரட்டப்பட்டு வீதி யோரமாக சில கற்கள் உருட்டி விடப்பட்ட நிலையில் காணப்படு கின்றன.

இந்தப் புராதன சின்னங்கள் அழிக்கப்படாமல் பாதுகாக்க நட வடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

வெற்றிலைக்கேணி கடற்கரை யிலிருந்து தெற்குப்பக்கமாக சுமார் 14 கிலோமீற்றர் தூரத்துக்கு ஆனை யிறவு - பூநகரி கடற்கரை வரை ஒல்லாந்தர் காலத்து புராதன சின் னங்கள் பல சிதைவடைந்த நிலை யிலுள்ளன.

வெற்றிலைக்கேணிக் கடற் கரைக்கு அண்மையில் உயரமான கோரி (வெளிச்சவீடு) ஒன்று காணப் படுவதுடன், தேசமடைந்த நிலை யில் கட்டடமும் கிணறு ஒன்றும் காணப்படுகிறது. கடற்கரையில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் மண் ணுள் புதையுண்ட கேணி ஒன்றும் காணப்படுகின்றது.

இங்கிருந்து 8 கிலோமீற்றர் தூரத்தில் கோயில்வயல் கிராமத் துக்கு அண்மையில் ஒல்லாந்தர் காலத்து இடித்த கட்டடம் ஒன்றும் காணப்படுகிறது. இங்கிருந்து சுமார் 6 கிலோ மீற்றர் தூரத்தில் ஏ-9 வீதிக்கு அண்மையில் வாடிவீடு ஒன்றும், முக்கோண கல்லினாலான புராதன சின்னங்களும் வரிசையாகக் காணப்படுகின்றன. பழைய வாடி வீடு ஆனையிறவு இராணுவ முகாம் தாக்குதலின்போது முற்றாகச் சேத மாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான புராதன சின்னங்க ளைப் பேணிப் பாதுகாக்க சம்பந் தப்பட்டவர்கள் நடவடிக்கைகள் மேற் கொள்வதன்மூலம், இவற்றை அழி விலிருந்து காப்பாற்றமுடியும். (21)

## விபத்தில் மூவர் காயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - மன்னார் பிர தேசத்தில் இடம்பெற்ற வீதி விபத் தில் மூவர் காயமடைந்தனர்.

மாங்குளம் - துணுக்காய் வீதி யில் ஓட்டோவும் - மோட்டார் சைக் கிளும் ஒன்றுடன் ஒன்று மோதிய தில், ஓட்டோச் சாரதி, மோட்டார் சைக்கிள் சாரதி மற்றும் ஓட்டோ வில் பயணித்த ஒருவர் உட்பட மூவர் காயமடைந்தனர்.

இந்த விபத்தில் ஓட்டோவும், மோட்டார் சைக்கிளும் கடும் சேதத் துக்குள்ளாகின.



வன்னிப் பதிவுகள்

## செம்பியன்பற்று பிரதேசசபை பொது நூலகத்தில் போதியளவு நூல்களை வைக்க கோரிக்கை!

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேசசபையின் செம்பியன்பற்று உப அலுவலகக் கட்டடத்தின் ஒரு பகுதியில், பிரதேசசபை பொது நூலகம் ஆரம்பிக்கப்பட்டு இயங்கிவருகிறது. நூலகத்தில் குறிப்பிட்டளவு நூல்களே - பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் பாவனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள், பாடசாலை மாணவர்களின் தேவைக்கேற்ப இன்னும் கூடிய அளவிலான நூல்களை பாவனைக்கு வைத்து உதவும்படி செம் பியன்பற்று உப அலுவலக பொறுப்பாளரிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (21)

## புனரமைக்கப்படாத நிலையில் செட்டிகுளம் பிரதேச வீதிகள்

(வவுனியா)

வவுனியா - செட்டிகுளம் பிர தேசத்தின் பெரும்பாலான வீதிகள் இதுவரையில் புனரமைக்கப்படாது காணப்படுகின்றன.

இந்தப் பிரதேசத்தில் செட்டி குளம் பிரதான வீதி மட்டும் புனர மைப்புச் செய்யப்பட்டு, ஏனைய கிராமங்களுக்கான வீதிகள் புனர மைப்புச் செய்யப்படாத நிலை யில், இந்தப் பகுதி மக்கள் தமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட வர்கள் கவனம் செலுத்த வேண்டு மென்று அந்தப் பகுதி மக்கள் கேட் டுள்ளனர்.

## வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவின் கீழ் பனை வள கைப்பணி மாணவர்களின் கண்காட்சியும் விற்பனை நிகழ்வுகளும்

கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி இந்து சமய அலுவல் கள் அமைச்சு, கல்வி வாழ்க் கைக்கு தொழில்பயிற்சிக்கு உத வும்அமைச்சால் நடைமுறைப்படுத் தப்பட்ட தொழில்சார் பயிற்சியில் வடமராட்சி கிழக்கு உதவி அர சாங்க அதிபர் பிரிவில் பயிற்சி பெற்ற பனைவள கைப்பணி மாண வர்களால் ஒழுங்குசெய்யப்பட்ட கண்காட்சியும், விற்பனையும் அண் மையில் பருத்தித்துறை பிரதேச சபை, செம்பியன்பற்று உப அலு வலக மண்டபத்தில், வடமராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் வீ.எஸ்.தியாக ராசா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் - தமிழீழ தேசி யக் கொடியைக் கடற்புலிகளின் மகளிர் அணிப்பொறுப்பாளர் எழில் வாணி ஏற்றிவைத்தார். மங்கள விளக்கை தாளையடி உதவிப் பங் குத்தந்தை அருட்திரு எம்.கான்ஸ் போமர் அடிகள், வடமராட்சி கிழக்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத் தர் எல். எச்.ஜீவரத்தினம் கிராம சேவை அலுவலர் எஸ்.வித்தியா பதி, பனை அபிவிருத்திச் சபை விரிவாக்கல் உத்தியோகத்தர் கே. கோபாலகிருஷ்ணா, பயிற்சி ஆசி ரியை ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

கண்காட்சி விற்பனை நிலை யத்தை, வடமராட்சி கிழக்கு உத வித் திட்டமிடல் பணிப்பாளர் க.ஈஸ் வரபாதம் நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.

பனைவள கைப்பணிக் கண் காட்சியை - பொதுமக்கள், பாட சாலை மாணவர்கள், அரச அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் பார்வையிட்டனர். (21)

## ஒளிவிழா

முல்லைத்தீவு - மாங்குளம் மகா வித்தியாலயத்தில் ஒளிவிழா நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு - மாங்குளம் மகா வித்தியாலய மண்டபத்தில் பாட சாலை அதிபர் தலைமையில் இடம் பெற்றது. இதில் மாணவர்கள், ஆசி ரியர்களின் கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன.

## சங்கத்தார்வயல், கோயில்வயல் வீதிகள் போக்குவரத்துக்கு முற்றாகத் தடை!

அண்மையில் தொடர்ந்து பெய்த கடும் மழை காரணமாக இயக்கச்சி சந்திக்கு அண்மையிலுள்ள பகுதி கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இந்தப் பிரதேசத்தின் சந்தை, கடைகள் போன்றவற்றைச் சுற்றி மழைநீர் தேங்கியுள்ளதுடன், மழை நீர் கடைகளுக்குள் உட்புகுந்தமை யால் சில கடைகள் மூடப்பட்டுள் ளன.

இயக்கச்சி சந்திக்கும் கலுவில் குளத்துக்கும் இடையில் ஏ-9 வீதி யில் சுமார் ஒன்றரை அடிவரை மழைநீர் தேங்கி நிற்பதால், வாக னங்கள் வெகு சிரமத்தின் மத்தி யிலேயே போக்குவரத்தை மேற் கொள்கின்றன.

வீதியில் மழைநீர் தேங்கி நிற்ப தால் இயக்கச்சி - சங்கத்தார்வயல், கோயில்வயல் வீதி பிரயாணத் துக்கு முற்றாகத் தடைசெய்யப்பட் டுள்ளது. (21)

# தமிழ்மக்கள் மீது இலங்கை அரசு போரைத் திணிக்க முயற்சிக்கிறது!

## மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி



(மன்னார்)

தமிழ் மக்கள் மீது இலங்கை அரசு போரைத் திணிக்கும் முயற்சிகளி லேயே தொடர்ந்து ஈடு பட்டு வருகின்றதென, தமிழீழ மகளிர் அரசி யற்துறைப் பொறுப் பாளர் தமிழினி தெரிவித் தார்.

மன்னார் - வட்டக் கண்டல் அரசியற்துறைச் செயலகத்தில் நடந்த புதன்கிழமை இடம்பெற்ற சமகால அரசியல்நிலை தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - காலம் காலமாக தமிழ் மக்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டு வந்தமையால், தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

தொடர்ந்து இந்தப் போராட்டத்தின் விளைவாக பெரும் அழிவுகளையும், இழப்புக்களையும் சந்தித்த இலங்கை அரசு - விடுதலைப் புலிகளுடன் சமாதான முயற்சிகளில் ஈடுபடுவதால், போலி வேடம் காட்டிக் கொண்டு மீண்டும் தமிழ் மக்கள் மீது போரைத் திணிப் பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கருத்தரங்கில் பொது அமைப்புப் பிரதிநிதி கள், அரச, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## மேஜர் முரளி உட்பட 10 வேங்கைகள் நினைவுதினம் மல்லாவியில் அனுஷ்டிப்பு!

(முல்லைத்தீவு)

இந்திய இராணுவத்துடனான மோதலில் வீரச் சாவடைந்த மேஜர் முரளி உட்பட, 10 மாவீரர்களின் நினைவுதினம் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட் டம் - மல்லாவியில் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு பின்தங்கிய வறிய மாணவர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் வகை யில் தமிழீழ மாணவர் அமைப்பினரால் அமைக்கப்பட்ட மேஜர் முரளி ஞாபகார்த்த கணினிப் பயிற்சி நிலை யத்தில் இடம்பெற்றது.

ஆசிரியர் சுபநேசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், தமிழீழ தேசியக் கொடியை பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் புனிதன் ஏற்றி வைத் தார்.

மேஜர் முரளியின் திருவுருவப்படத்துக்கான ஈகச் சுடரை வவுனியா மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் ஸ்ரீ ஏற்றிவைத்தார். மலர் மாலையை ஆசிரியர் சிவதிருநன் அணிவித்தார்.

தொடர்ந்து சிறப்புரைகள், கருத்துரைகள், கலை நிகழ்ச்சிகள் என்பன இடம்பெற்றன.

## இராமநாதபுரத்தில் உழவு இயந்திரத்திலிருந்து வீழ்ந்து சிறுவன் மரணம்!

(வட்டக்கச்சி)

இராமநாதபுரம் பிரதேசத்தில் உழவு இயந்திரத் திலிருந்து தவறி வீழ்ந்ததில் சிறுவன் ஒருவன் உயி ரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் இராமநாதபுரம் 7 ஆம் யுனிற் றைச் சேர்ந்த நாகேஸ்வரன் ஆதிஸ் (வயது 14) என்பவரே உயிரிழந்தவராவர்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது - கடந்த சனிக்கிழமை காலை 11.30 மணியளவில் இராமநாதபுரத்திலிருந்து தருமபுரம் நோக்கிச் சென்று கொண்டிருந்த உழவு இயந்திரப் பெட்டியிலிருந்து முன்பகுதிக்குச் செல்ல முற்பட்டவேளை- தவறி வீழ்ந் ததால் உழவு இயந்திரத்தின் சக்கரம் சிறுவனின் உடலின்மேலே ஏறியதால் படுகாயமடைந்த சிறுவனை கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றபோது வழியில் உயிரிழந்ததாகத் தெரியவருகிறது. (09)





வவுனியா - அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மங்கள விளக்கை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஏற்றுவதை முதலாவது படத்திலும், வித்தியால யத்தால் வெளியிடப்பட்ட 'மான்மியம்' இதழை வவுனியா மாவட்ட தேசிய அமைப்பின் தலைவர் செ.சபாநாதன் வெளியிட்டுவைக்க, பாடசாலையின் அதிபர் பெற்றுக்கொள்வதை இரண்டாவது படத் திலும் காணலாம். படம் - கனகரவி

# கிறிஸ்து இன்று எங்கே பிறப்பார்?

மார்கழி பிறந்துவிட்டால் மனங்களில் ஒரு கிளுகிளுப்பு. கிறிஸ்மஸ் பிறக்கப்போகின்றது என்பதே அந்தக்கிளுகிளுப்புக்குக் காரணம். மகிழ்வாய் இருக்க விரும்புவது மனித இயல்பு. அது மனிதத்துடன் இணைந்து பிறந்த ஒரு பேரவா. கிறிஸ்துவின் பிறப்பு வருடாவருடம் குதூகலமாகக் கொண்டாடப்படும் ஒரு பெருவிழா, புனிதம் ஒன்று மனிதம் ஆன இந்த விழாவுக்காக நாம் செய்யும் ஆயத்தங்களோ பல ரகமானவை. உள் ஆயத்தங்களைவிட வெளி ஆயத்தங்களே தடல் புடலாக நடக்கும். 2003 ஆம் ஆண்டில் நாம் எதிர்கொள்ள இருக்கும் கிறிஸ்மஸ் விழா எமக்குச் சொல்லும் செய்தி என்ன? அன்று மாட்டுத் தொழுவத்தில் பிறந்த இயேசுவை இன்றும் அப்படிப்பட்ட ஒரு மாட்டுத் தொழுவத்தில் சந்தித்துவிட்டு, வழமைபோல கொண்டாட்டங்களில் ஈடுபடவா நாம் விரும்புகின்றோம்?



ம.ஆரணி

தொடர்ச்சியான 20 வருடப் பேரின் கொடுமையால், துவண்டு, சற்று ஓய்வெடுக்கும் இந்த மண்ணில் கிறிஸ்து எப்படிப் பிறப்பார்? யுத்த நிறுத்தம் ஏற்பட்டது. ஏ9 பாதை திறந்தது. எமக்கு இந்த வருடம் கிடைத்த மகிழ்ச்சிகளில் இவை ஒரு சில. இந்த மகிழ்ச்சியை எவ்வாறு அனுபவிக்கின்றோம்? நிரந்தர நிம்மதி, அமைதி இவை போன்ற நம்பிக்கை எமக்குப் பிறக்கவில்லை. தாக்கப்பட்ட மக்களின் மனங்களில் நம்பிக்கை ஒளி சுடர்விட்டதாகத் தெரியவில்லை. அருள் வந்து குவியவேண்டிய மனங்களில் எல்லாம் பொரு ளாசை பொங்கிப் பொருமி நிற்பது நிதர்சனமாகத் தெரியும்போது எம்மவர்களில் பலர் உள்ளூரச் சிலவற்றை உணர்ந்ததாகப் புலப்படவில்லை.

இந்த விழா இன்று உண்மையில் என்னை பல மனங்களிலும், இடங்களிலும் பிறக்கின்ற - பிறக்கும் கிறிஸ்துவைச் சந்திக்க - அந்தப் பிறப்புகளைக் கொண்டாட அழைக்கின்றது. அன்புக்காக ஏங்கி நிற்கும் பலருக்கு நான் அன்பைப் பகிரும்போது தனிமையால் வாடுவோரின் தனிமையைப் பகிர்ந்து அவர்களின் வாழ்வில் மகிழ்ச்சியை, மன்னிப்பை, மறுமலர்ச்சியை அளிக்க நான் முற்படும்போது என் வீட்டுப் படலையைத் திறந்து கொண்டு பல இயலாமைகள் ஏக்கங்களுடன் என்னிடம் சில உதவிகளை எதிர்பார்த்து வருவோருக்கு நான் நல் மனத்துடன், உதவும்போது என் வசதிகள் வாய்ப்புக்களுக்காக நான் ஓடி ஓடி உழைக்கும் நேரத்தின் சில மணித் துளிகளை வாழ்க்கையின் விளிம்பிற்கு தள்ளப்பட்டு, என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து நிற்போருக்காகச் செலவிடும்போது, பலவிதமான உடல் உள நோயால் உடைந்து போனவர்களைத் தேற்றும்போது பல விதமான அடிமைத் தனங்களுக்குள் சிக்கி விடுதலை அடைய முடியாமலிருப்போரை விடுவிகக்கும் போது, உயிருக்குயிராய் நேசித்த பல நெருக்கமான உறவுகளைப் பிரிந்து தவிப்போருக்கு உதவும் போது, விடியாதா பொழுதென்று விம்மிடும் மனங்களுடனும் வீங்கிய விழிகளுடனும் நாளை எதிர்கொள்வோருக்கு நம்பிக்கை ஒளியாகும்போது, வன்செயல்க ளின் கொடூரத்தால் வறண்ட மனங்களை மனிதநேய உணர்வு களால் நிறைத்து, நிரந்தர அமைதிக்காக உழைக்கும்போது, அடிப்படை மனித உரிமைகளுக் காக உழைக்கும் பலருக்கு உதவும் போது, பலரின் கதைகளுக்கு செவிசாய்க்கும்பொது உலகில் உதிர்ந்து போய் - அநாதைகள், அகதிகள், நோயாளிகள், வீடற்றவர்கள், விலாசம் அற்றவர்கள், பட்டினிச்சாவால் மடிபவர்கள், விபச்சாரிகள், போதைப்பிரியர்கள், பகைவர்கள், பைத்தியக்காரர்கள் என்று பட்டியலிடப் பட்ட மனிதர்களின் வாழ்வை எம் அன்புச் சேவையால் துளிர்க்கச் செய்யும்போது, பிரிவினைகளை, பாகுபாடுகளை அடி யோடு களையும்போது, அங்கு நிச்சயம் கிறிஸ்து பிறப்பார் அன்றோ? இதுவன்றோ கிறிஸ்மஸ்?

கிறிஸ்துவின் பிறப்பின்போது விண்ணகத் தூதர் பேரணி உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக என்று வாழ்த்தியதாக வேதம் சொல்கிறது. அவருக்கு உகந்த வாழ்க்கையை நாம் வாழும் ஒவ்வொரு நிமிடமும் கிறிஸ்து என்னில் பிறந்து கொணடே இருக்கின்றார். பெரிய காரியங்களைச் செய்து, நான் கிறிஸ்துவை என் வாழ்வில் பிறப்பிக்கலாம் என்று இல்லை. அன்றாட எம் சாதாரண வாழ்வில் மனதர்களாகிய நாம், மனித உணர்வுகளைப் புரிந்து அவர்களை மதித்து, அவர்களுக்கு இதயத்தால் செவிசாய்த்து அன்பு, பாச மென்ற தூறல்களில் அவர்களை நனைத்து வாழவைக்கும் எல்லா இடங்களிலும், மனங்களிலும் அவர் நிச்சயமாகப் பிறப்பார். அவரின் ஒளி எங்கும் பட்டுத்தெறிக்கும். அமைதி பிறக்கும்.

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது நத்தார் வாழ்த்துக்கள்

புதுவருடத்தை முன்னிட்டு சலுகை விலையில்
கண்களைப் பரிசோதித்துச் சிறந்த
கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்,
இழந்த பற்களுக்கு நிகரான சங்குப்
பற்களைக் கட்டிக்கொள்ளவும், உறுதி மிக்க
பற்கிளிப்புகளைப் பொருத்திக்கொள்ளவும்
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

எரிக்கணேஷ்

564, 566 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021-222-2486

இல: 9,1 K.K.S. வீதி,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.

இல: 80, K.K.S. வீதி,
சுன்னாகம்.

(C/3517)

அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது
நத்தார் வாழ்த்துக்கள்

UNIT

Universal Network of Information Technology

347, K.K.S Road,
Manohara Theatre Junction,
Jaffna, Sri Lanka.

(C/3519)

# கிறிஸ்து மீண்டும் பிறக்கத்தான் வேண்டுமா?

கிறிஸ்து மீண்டும் நமக்காகப் பிறக்க வேண்டுமா? நாம் அவர் பிறப்பை எதிர் கொள்ள வேண்டுமா? குடிக்கணக்கு எடுக்க இந்த நாட்களிலே



தான் இறை மகன் பிறந்தார் அன்று. ஆனால் இன்றும் எமது நாட்டில் குறிப்பாக தமிழ்மக்கள் தினமும் குடிக்கணக்கு 'எடுக்கப்பட்டே வருகிறார்கள். முந்தி இருந்த இடத்தைவிட்டு, சொந்த மண்ணைவிட்டு, பந்த பாசங்களை விட்டு, அந்த காலத்திலே அகதிகளாக, வந்தேறு குடிகளாக வாழ்கிறார்கள். மீளக்குடியேறும் உரிமையற்று, ஆளாத் துயரத்தில், வாழவழியின்றி வாடுகின்றார்கள். இவர்கள் துயர் தீர மீண்டும் யேசு பிறக்கத்தான் வேண்டும். அடிமைக் கதவை, அகதிக்க தவைத் திறக்கத்தான் வேண்டும். அவர்களும் பேரொளியைக் காணததான் வேண்டும்.

யேசு பிறப்பதற்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே ஏசாயா மூலமாக, "காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மீது ஒளி உதித்துள்ளது" என இறைவன் அறிவித்துவிடடார். (எசா 9:2-7) அன்றைய இதே சூழலில் தான் நாமும், நமது மக்களும் வாழ்கிறோம். எமது வாழ்விலும் பேரொளி சுடர் விடவேண்டும்.

இறைவனால் குறித்த காலம் நிறைவுறும் வேளையில் - மானிட வரலாற்றில் மீட்பராம் யேசு அவதரித்தார். இதனை நாம் நற்செய்தி வாயிலாக, மறையுரை வாயிலாக அறிகின்றோம். ஆனால் அவர் பிறப்பின் சிறப்பை, நோக்கை உணர்ந்துள்ளோமா?

காலத்தைக் கடந்த இறைவன், காலத்திற்குட்பட்டவரானார். எங்கும் நிறைந்த இறைவன், ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் தம்மை ஒடுக்கிக்கொண் டார். அனைத்து ஆற்றலும் கொண்ட இறைவன் ஈடு இணை யற்ற வகையில், உலகமே வியக்க ஒரு குழந்தையாய் தம்மைத் தாழ்த்திக் கொண்டார். எல்லா வகைச் செல்வங்களுக் கும் உரிமையாளரான இறைவன், ஏழைக் குழந்தையாக மாடடையும் தொழுவத்தில் ஆடையற்று வாடையிலே பிறக்கின்ற அளவிற்குப் வெறுமையானார். அதனால் அவரின் பிறப்பு நிகழ்ச்சி எமக்கு அர்த்த முள்ளதாகும், பொருள் நிறைந் ததாகும். இந்த மறை உண்மை, எந்த அளவிற்குத் தான் நாமும் மறு கிறிஸ்துவாக மாறமுடியும்.

யேசு ஒரு நிழலல்ல தோன்றி மறைவதற்கு. மானிட இனத்தோடு, அதுவும் ஏழை எளிய மக்களோடு, ஒதுக்கப்பட்டவர்களோடு, தாழ்த்தப்பட்டவர்களோடு, புறக்கணிக்கப்பட்டவர்களோடு, நோயாளர்களோடு தன்னை சங்கமித்துக் கொண்டார். அவரது பிறப்பு வரலாற்றை நாம் காணும் பொழுது, படிக்கும் பொழுது, அறியும் பொழுது, அவரது முன்னோர்களில் சிலர் புற இனத்தைச் சார்ந்தவர்களாகவும், ஒழுக்க நெறியில் தவறியவர்களாகவும், மூட நம்பிக்கை கொண்டவர்களாகவும் இருந்ததை அறிகின்றோம். இதனால் வாழ்க்கையில் ஆன்மீகத்தில் அசிங்கப்படுத்தப் பட்டவர் கள்ள தூய்மையாக் கப்பட வேண்டிய நிலையில், காலத்தில் அவர் அவதரித்தார், அவரது மனித அவதாரம் சரியான காலத்தில், உரிய நேரத்தில் இடம்பெற்றது.

யேசு சேற்றில் மலர்ந்த செந்தாமரையானார். அவரது பிறப்பு இறைவனின் தனியொரு செயலால், இயற்கைக்கு மேம்பட்ட வகையிலே அமைந் தாலும், மாட்டுத் தொழுவத்தில் பிறந்ததன் மூலம் அவரை எம் குடும்பத்தில் மட்டுமல்ல, எத்தனையோ ஏழை எளிய மக்களின் உருவிலே நாம் காண வேண்டும். எம்மிடம் உள்ளத் தில் ஒரு சிறிய பங்காவது அவர்களது துயர்துடைக்க, இன்னல்களை அகற்ற, கண்ணீரைத் துடைக்க நாம் உதவ வேண்டும்.

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது நத்தார் பண்டிகை வாழ்த்துக்கள்

கண் பரிசோதித்து கண்ணாடி பெற்றுக்கொள்ள
உறுதியான பற்களைக் கட்டிக் கொள்ள
மிதப்பு பற்களுக்கு கிளிப் செய்து கொள்ள

நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

றெனி

பல் மூக்கு கண்ணாடியகம்

கண்டி வீதி,
சாவகச்சேரி.

540, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பிரதான வீதி,
பருத்தித்துறை.

(C/3512)


அவசரப் பணத் தேவையின் போது
ரண் சுரெக்கும்
இலங்கை வங்கியின் தங்க நகை அடகுச் சேவை
ஒரு பவுணுக்கு குறைந்த வட்டியில் கூடிய தொகை
இலங்கை வங்கி
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி
(C/3484)


பொற்காலம் வண்ணக்கலையகம்
30 நிமிடத்தில் புகைப்படச்சுருள் பிரதியாக்கல்கள்
உட்புற,வெளிப்புற படப்பிடிப்புக்கள்,
வீடியோ படப்பிடிப்புக்கள்
இறுவெட்டு (CD)க்கு மூலம் புரட்சி,சினிமா பாடற்பதிவுகள்
கணினி முறையில் வீடியோ மிக்சிங்
டிஜிற்றல் முறையில் அல்பங்கள் தயாரித்தல்
ஒலி-ஒளி நாடாவிலுள்ள வீடியோ படங்களை இறுவெட்டுக்கு (CD)க்கு மாற்றுதல்
வீடியோ-ஓடியோ புகைப்படப் பொருட்கள் விற்பனை.
இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்.....
கணினி மூலம் புகைப்படத்திலிருந்து புகைப்படமாக்கல்.
கணினி மூலம் புகைப்படத்திலிருந்து புகைப்படமாக்கல்.
சீர்கெட்ட பழைய புகைப்படங்களை புனரமைத்தல்.
சிறிய புகைப்படங்களை பெருப்பித்தல்
கறுப்பு-வெள்ளை புகைப்படங்களை நிறமாக்குதல்.
புகைப்படத்துடன் கூடிய வாழ்த்து மடல்கள் உருவாக்கங்கள்.
உங்கள் புகைப்படத்தின் மீதான சகல வேலைப்பாடுகள்
அனைத்திற்கும்.........
வீசேட விலைக்கழிவு!
நத்தார் முதல் புதுவருடம் வரை
4R படம் 12/=
Digital Print
"பொற்காலம் வண்ணக்கலையகம்"
பிரதான சாலை கிளிநொச்சி
தொலைபேசி: 021 228 5825